mssrf

15 ஆண்டுகள்

அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம்



# சிறு மீனவர்களின் மீள்திறனை மேம்படுத்துதல் மற்றும் வாழ்வாதாரங்களை மீட்டெடுத்தல்

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

M S Swaminathan Research Foundation
SCIENCE FOR SUSTAINABLE DEVELOPMENT

15 ஆண்டுகள்

அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி மையம்

# சிறு மீனவர்களின் மீள்திறனை மேம்படுத்துதல் மற்றும் வாழ்வாதாரங்களை மீட்டெடுத்தல்

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்



© MSSRF

**MSSRF/OP/13/2025**

**CITATION:** Velvizhi, S. 2025. *Fish for All Centre Impact book (Tamil)*, M.S. Swaminathan Research Foundation. MSSRF/OP/13/2025.

**Contributors:** Shwetha Tony, Thamizhazhagan, Sibinthar, Simaanchana, Selvarasu, Balaguru, Abinaya, Siva, Kevikumar, Kalaiyarasi, Uma, Akila, Sahaya Rani, Iyappan , Hema, Ramya, Sneha, Supriya, Kanmani, Abdul Salam, Lourdusamy, Mubarak, Manikandan, Sabapathi

**Design:** S. Kannappan.

# முகவுரை



**டாக்டர். சௌமியா சுவாமிநாதன்**
தலைவர், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

## மக்களின் வாழ்க்கை நிலையை மாற்றியமைத்த பதினைந்து ஆண்டுகள்: மீள்திறன் மற்றும் புதுமையாக்கத்தின் ஒரு சாட்சியம்

அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் பதினைந்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில், கடலோர சமூக மக்களின் வாழ்வில் அது ஏற்படுத்தியுள்ள ஆக்கப்பூர்வமான தாக்கத்தைக் கண்டு நான் பெருமிதம் கொள்கிறேன். பேரழிவு தந்த 2004 சுனாமிக்குப் பிறகு நிறுவப்பட்ட இந்த மையம், நமது கடலோர மக்களின் மீள்தன்மை பகிரப்பட்ட அறிவு, புதுமை மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடித்தளத்தில் கட்டமைக்கப்பட வேண்டும் என்ற அங்கீகாரத்திலிருந்து பிறந்தது. பூம்புகாரில் ஒரு சிறிய அளவிலான தொடக்கத்துடன் நிறுவப்பட்ட இந்த மையம் இன்று ஒரு துடிப்பான, உயிரோட்டமுள்ள மையமாக வளர்ந்துள்ளது. மீனவர் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சிக்கலான சவால்களைக் கையாள்வதோடு, நிலைத்தன்மையுள்ள முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளையும் இம்மையம் உருவாக்குகிறது. நமது கடல்களைச் சார்ந்திருக்கும் மக்களின் வாழ்க்கையுடன் அறிவியலை நெருக்கமாகக் கொண்டு வந்த ஒரு மாற்றத்தின் கதையை இந்த மையத்தின் பணி எடுத்துரைக்கிறது. இம்மையத்தின் முயற்சிகள் மீனவர்களுக்கு அதிநவீன மீன்பிடிப்பு கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியுள்ளன; அவர்களின் பாதுகாப்பையும், வருமானத்தையும் மற்றும் அவர்களின் வள மேலாண்மை திறன்களையும் இதன் மூலம் மேம்படுத்தியிருக்கின்றன. மீனவர் நண்பன் கைபேசி செயலி (Fisher Friend Mobile Application) மற்றும் பெண்கள் இணைப்பு சவால் (Women Connect Challenge) போன்ற திட்டங்கள் நவீன தொழில்நுட்பத்தை ஏற்று பயன்படுத்துவதை அனைவருக்குமானதாக மாற்றியிருக்கிறது. சமூகத்தால் நிர்வகிக்கப்படும் செயற்கைப் பவளப்பாறைகள் மற்றும் தேவையற்ற கடல் உயிரினங்களை பிடிப்பதைக் குறைக்கும் சாதனங்கள் போன்ற புதுமையான உத்திகள் பாதுகாப்புக்கும் வாழ்வாதாரங்களுக்கும் இடையில் ஒரு சமநிலையை உருவாக்கியுள்ளன. ஒரு காலத்தில் மீன்பிடிப்பு தொடர்புடைய நடவடிக்கைகளில் விலகி ஓரத்தில் இருந்த பெண்களை, முன்னணித் தலைவர்களாகவும், தொழில்முனைவோராகவும் உயர்த்தி நிற்பதில் இம்மையத்தின் பங்களிப்பு பெரிதும் ஊக்கமளிக்கிறது. மதிப்பு கூட்டப்பட்ட மீன் பொருட்கள் முதல் சூரியசக்தி உலர்த்திகளைப் பயன்படுத்தி தரமான கருவாடு தயாரிப்பு வரை, புதுமையான உத்திகளும், பயிற்சியும் எவ்வாறு புதிய பொருளாதார வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்பதை மீனவப் பெண்கள் நிரூபித்துள்ளனர். அதே நேரத்தில் உணவுப் பாதுகாப்பும், தரமும் மேம்படுத்தப்பட்டிருக்கிறது. சிறிய அளவிலான மீன் வளர்ப்பை ஊக்குவிக்கும் முயற்சிகள், நிலையான வருவாய்க்கான கதவுகளைத் திறந்து, மீனவக் குடும்பங்களுக்கும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பயனளிக்கிறது. அறிவியலானது மக்களின் கருத்துகளுக்கு செவிமடுக்கும்போதும், தொழில்நுட்பம் சமூகங்களுக்காகச் செயலாற்றும்போதும், மற்றும் தீர்வுகள் அவற்றைப் பயன்படுத்துபவர்களுடன் கலந்துரையாடி இணைந்து உருவாக்கப்படும்போதும் உண்மையான மாற்றம் நிகழ்கிறது என்பதை இந்தப் பதினைந்தாண்டு பயணம் தெளிவாக நிரூபித்துள்ளது. மீனவப் பெண்கள், மீனவர்கள், மீன் விவசாயிகள் மற்றும் இளைஞர்களே இந்த வெற்றிக் கதையின் உண்மையான நாயகர்கள். நமது சாதனைகளைப் பற்றி பெருமிதத்துடன் நினைத்துப் பார்க்கும் அதே வேளையில், நமக்கு முன்னே இருக்கும் பாதை சவாலானது என்பதையும் நாம் உணர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். காலநிலை மாற்றம், மிதமிஞ்சிய மீன்பிடிப்பு மற்றும் மாசுபாடு ஆகியவற்றால் கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகள் கடும் அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளன. இந்த சவால்களை சமாளிக்க பெரிய அளவிலான கூட்டு முயற்சி, வலுவான கூட்டாண்மைகள் மற்றும் புதுமையான தீர்வுகள் தேவைப்படுகின்றன. அறிவியல், சமூகம் மற்றும் வளம் குன்றா நிலைத்தன்மை ஆகியவை ஒன்றிணைந்து செயல்படும்போது என்னவெல்லாம் சாத்தியம் என்பதை எடுத்துக்காட்டியிருக்கும், 'அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம்' ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளது. மையத்தின் பணியாளர்கள் தளராத அர்ப்பணிப்பு மற்றும் பேரார்வத்திற்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மையத்தின் மீது நம்பிக்கை வைத்து, தங்கள் நேரத்தையும், அறிவையும், முயற்சிகளையும் வழங்கிய மீனவ சமூகங்களுக்கு 'நீங்கள் தான் இந்தப் பயணத்தின் இதயமாக இருக்கிறீர்கள்' என்று உறுதியுடன் என்னால் கூற முடியும். இந்த தொலைநோக்கு திட்டத்தை முழுமையாக நம்பி, அதை முன்னோக்கி எடுத்துச் செல்ல எங்களுக்கு உதவிய எங்கள் கூட்டாளர்கள், நிதியளிப்பவர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவிக்கிறேன். இந்த பதினைந்தாவது ஆண்டு ஒரு மைல்கல் சாதனை நிகழ்வாக மட்டுமல்லாமல், இன்னும் பெரிய லட்சிய பயணத்தின் தொடக்கமாகவும் இருக்கட்டும். நமது கடலோர சமூகங்கள் தொடர்ந்து செழித்து வளரும், கடல்களும் அதில் வாழும் உயிரினங்களும் பாதுகாக்கப்படும், மற்றும் எதிர்கால தலைமுறைகளுக்கும் வாழ்வாதாரங்கள் வலுப்படுத்தப்படும் ஒரு புதிய அத்தியாயமாக இது இருக்கட்டும்.

# முன்னுரை



**டாக்டர் ரெங்கலட்சுமி**
செயல் இயக்குநர், கள செயல்பாடுகள்,
எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

## மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த பதினைந்து ஆண்டுகள்: மீள்திறன் மற்றும் புதுமையாக்கத்தின் ஒரு சாட்சியம்

2004 ஆம் ஆண்டு இந்தியப் பெருங்கடல் சுனாமியின் 20 ஆம் ஆண்டு நிறைவை நினைவு கூறும் இவ்வேளையில், பேரிடர் மேலாண்மை மற்றும் பாதிப்பைக் குறைப்பதில் நாம் பெற்ற விலைமதிப்பற்ற பாடங்களைச் சிந்தித்துப் பார்க்கிறோம். அபாயங்களைத் தணிப்பதற்கும் இயற்கைச் சீற்றங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் உள்ளூர் சமூகங்களுக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் ஆண்களுக்கு, தயார்நிலை குறித்து திறனையும், அதிகாரத்தையும் அளிப்பதே நீண்ட கால அடிப்படையிலான அடித்தளமாக அமைந்துள்ளது.

இந்த நோக்கத்துடன் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மூலம் 2009ல் ‘அனைவருக்கும் மீன் மையம்’ நிறுவப்பட்டது. கடந்த 15 ஆண்டுகளில், பாதிப்பிலிருந்து விடுபட்டு மீண்டெழும் கடலோர சமூகத்தின் மீள்திறனை மேம்படுத்துவதிலும் மற்றும் இடர்களை குறைப்பதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை நாம் அடைந்திருக்கிறோம். எமது முயற்சிகள் குறிப்பிடத்தக்க சிறப்பான விளைவுகளைத் தந்திருக்கின்றன; இவை எங்கள் அணுகுமுறையின் பயனளிக்கும் செயல்திறனை நிரூபிக்கிறது.

இருப்பினும், கடலோர சமூகங்கள் மீது காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்கள் அதிகரித்து வருகின்றன என்பது வெளிப்படையாக தெரிகிறது. சுகாதாரம், வாழ்வாதாரங்கள், இயற்கை வளங்கள் மற்றும் பிராந்தியப் பொருளாதாரம் ஆகியவற்றில் அதன் தீங்கு விளைவிக்கும் விளைவுகளைத் தணிக்க, மேலும் நடைமுறைச் சாத்தியமான ஆராய்ச்சி மற்றும் புதுமையான உத்திகள், அறிவு உருவாக்கம் மற்றும் நடைமுறைக்கு உகந்த செயல்பாடுகள் அவசியமாகின்றன.

நிகழ்ந்திருக்கும் தாக்கம் குறித்த இந்த அறிக்கை எங்களின் கடந்த 15 ஆண்டுகால பயணத்தின்முக்கிய நிகழ்வுகளை முன்னிலைப்படுத்துகிறது; நிலைத்தன்மையுள்ள வளர்ச்சி இலக்குகள் 1, 2, மற்றும் 14 -ஐ அடைவதில் எங்கள் பங்களிப்புகளையும், கடல் தசாப்த சவால்கள் 1, 2, 5, 6, மற்றும் 9-ஐ எதிர்கொள்வதையும், முன்னுரிமை நடவடிக்கைகளையும் வெளிப்படுத்துகிறது. தொடர்புடைய கூட்டாண்மைகளுடன் அக்கறை காட்டப்பட வேண்டிய புதிய பகுதிகளில் வெற்றிகரமான மாதிரிகளை விரிவாக்கும் எங்கள் நடவடிக்கையை மேற்கொள்ள நாங்கள் விரும்புகிறோம்.

எங்களின் 15 ஆண்டுகள் பயணத்தில் பல சவால்களோடு, வளர்ச்சி சாதனைகளும், கற்றுக்கொண்ட பாடங்களும் இருந்திருக்கின்றன. அனைத்து கூட்டாளர்கள், மீனவ சமூகத்தினர், அரசு மற்றும் ஆராய்ச்சி, கொள்கை மற்றும் மேம்பாட்டு அமைப்புகளுக்கு அவர்களின் தளராத ஆதரவிற்கும் வழிகாட்டுதலுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த அறிக்கை எங்கள் குழுவின் அர்ப்பணிப்புக்கும், கடின உழைப்புக்கும் ஒரு நேர்த்தியான சான்றாகும்: அறிவியலாளர்கள், மேம்பாட்டு வல்லுநர்கள், நிர்வாக ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். அவர்களின் அயராத முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புமிக்க நடவடிக்கைகள் கடலோர சமூகங்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களை சுற்றுச்சூழலுடன் சேர்த்து மேம்படுத்தியுள்ளன. சாத்தியமான அனைத்து ஆதரவையும் இக்குழுவினருக்கு வழங்குவேன் என நான் உறுதியளிக்கிறேன்; மேலும் அவர்களின் எதிர்கால முயற்சிகள் மற்றும் செயல்கள் அனைத்திலும் தொடர்ச்சியான வெற்றியைப் பெற நான் வாழ்த்துகிறேன்.

# நன்றியுரை

## மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த பதினைந்து ஆண்டுகள்: மீள்திறன் மற்றும் புதுமையாக்கத்தின் ஒரு சாட்சியம்



**டாக்டர் வேல்விழி**
கள இயக்குநர் – கடலோர வளங்கள் மற்றும் மீன்வளம்,
எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

நமது நிறுவனர் பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், சுனாமிக்குப் பிந்தைய மீட்பு காலகட்டத்தில் கடலோர சமூகங்கள் எதிர்கொள்ளும் அவசர சவால்களை எதிர்கொள்ளவும், காலநிலை அபாயங்களின் தாக்கத்தைக் குறைக்கவும், கடலோர சமூகங்களின் வாழ்வாதாரங்களை வலுப்படுத்தவும் "அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் " என்ற தனித்துவமான திட்டத்தை தொலைநோக்கு கண்ணோட்டத்துடன் உருவாக்கினார். இன்று, மையம் தனது 15வது ஆண்டு செயல்பாடுகளை வெற்றிகரமாக நிறைவுசெய்து, நிலையான முன்னேற்றத்திற்காக அறிவியலை சமூகத்துடன் இணைப்பதன் மூலம் அவரது தொலைநோக்கு இலட்சியத்தை நனவாக்கியுள்ளது என்று கூறுவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

15 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில், எங்களுக்கு ஆதரவளிக்கும் தூண்களாக இருப்பவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம். மையத்தின் பல்வேறு முயற்சிகளுக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்கியதற்காக எங்கள் நன்கொடையாளர்களான டாடா, INCOIS-MOES, குவால்காம் வயர்லெஸ் ரீச், நபார்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி, ரிலையன்ஸ் அறக்கட்டளை, ICAR-CIBA, ICAR-NBFGR, UNDP-SGP, ஃபைவ் ஸ்டார், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB), மற்றும் HCL அறக்கட்டளை ஆகியோர் உட்பட அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

எங்கள் அறக்கட்டளை அமைப்பின் தலைவர் டாக்டர் சௌமியா சுவாமிநாதன் அவர்களின் சிறப்பான தலைமைத்துவத்திற்கும், வழங்கும் ஊக்கத்திற்கும் எங்களின் பணிவான நன்றிகள். அவரின் வழிகாட்டுதலும் நிபுணத்துவமும் எங்கள் மையத்தின் செயல்பாடுகளை வடிவமைப்பதிலும் எங்கள் செயல்திட்டத்தை துடிப்புடன் முன்னோக்கி எடுத்துச் செல்வதிலும் இலக்கை முன்னோக்கி செலுத்துவதிலும் விலைமதிப்பற்றதாக இருந்துள்ளன.

எங்கள் செயல் இயக்குநர்களான டாக்டர் ஆர். ரெங்கலட்சுமி, மற்றும் திரு. ஷ்ரீனி ராமன் ஆகியோருக்கு, அவர்கள் வழங்கிய சரியான நேர வழிகாட்டுதல் மற்றும் ஆதரவிற்காக நன்றி கூறுகிறோம். அவை எங்கள் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தவும் இலக்குகளை அடையவும் பெரிதும் உதவின. மேலும், எங்கள் மூத்த அறிவியலாளர்கள் மற்றும் இயக்குநர்களான டாக்டர் ஆர். ராமசுப்பிரமணியன், டாக்டர் வி.ஆர். பிரபாவதி, மற்றும் டாக்டர் இ.டி. இஸ்ரேல் ஆலிவர் கிங் ஆகியோரின் மதிப்புமிக்க வழிகாட்டுதல் மற்றும் ஆதரவையும் மனமார பாராட்டுகிறோம். எங்கள் உத்திகளை வகுப்பதற்கும் திட்டங்களை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கும் அவர்களின் நிபுணத்துவமும் அனுபவமும், ஆலோசனையும் இன்றியமையாதவையாக இருந்திருக்கின்றன.

அனைவருக்கும் மீன் மையத்தின் தற்போதைய பணியாளர்கள் மற்றும் முன்னாள் இயக்குநர்கள், அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமது வெற்றிக்கு அவர்களின் குழுப்பணி, அர்ப்பணிப்பு மற்றும் செயல்திட்டத்தின் மீதான ஈடுபாடு ஆகியவையே முக்கியப் பங்காற்றியுள்ளன.

இந்த அறிக்கைக்கான தரவுகளைத் தொகுக்க உதவிய செல்வி. ஸ்வேதா டோனி மற்றும் செல்வி. ஆர்த்தி ஆகியோருக்கு எங்கள் சிறப்பு நன்றிகள்.

மிக முக்கியமாக, எங்கள் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த ஒவ்வொரு மீனவர், மீனவப் பெண், மீன் விவசாயி, இளைஞர் தலைவர் மற்றும் குழந்தைகள் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம். ஏனெனில், உங்கள் கருத்துகள், வெற்றிக் கதைகள் மற்றும் தேவைகள் எங்களை வழிநடத்தி, கடலோர சமூகங்களுக்குச் சிறப்பாகச் சேவை ஆற்றவும் எங்கள் அணுகுமுறையைச் செம்மைப்படுத்தவும் உதவியுள்ளன.

இந்தக் கூட்டு வளர்ச்சிப் பயணத்தின் அடுத்த கட்டத்தில் நாங்கள் நுழையும்போது, கடந்த 15 ஆண்டுகளில் கற்றுக் கொண்ட பாடங்களையும் அடைந்த வெற்றிகளையும் புதுப்பிக்கப்பட்ட ஆற்றலுடன் முன்னெடுத்துச் செல்கிறோம். இந்தியாவின் கடலோர சமூகங்கள் மீள்திறனுடனும், வளத்துடனும், எதிர்காலத்திற்குத் தயாராக இருப்பதை உறுதிசெய்ய, புதுமைப்படுத்துதல், மீட்டெடுத்தல் மற்றும் அதிகாரமளித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.



# அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் 15 ஆண்டுகள்: சிறு மீனவர்களின் மீள்திறனை உயர்த்துதல் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல்.

## சுருக்கத் தொகுப்பு

அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் (FRTC), இந்தியாவின் கடலோர சமூகங்களுக்கு மாற்றத்திற்கான வழிகாட்டியாகவும், கலங்கரை விளக்கமாகவும் திகழ்கிறது. 2004 சுனாமிக்குப் பிறகு நிறுவப்பட்ட மையம், பாரம்பரிய அறிவைப் புதுமையுடன் ஒருங்கிணைத்து, நிலையான வாழ்வாதாரங்களை வளர்த்திருப்பதுடன் சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுத்திருக்கிறது. இதன் மூலம் மீன்வளத் துறையின் செயல்பாட்டையே மறுவரையறை செய்வதில் 15 ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுள்ளது.

இம்மையத்தின் ஒரு செயல்பாடான சமூகத்தால் நிர்வகிக்கப்படும் செயற்கைப் பவளப்பாறைகள், கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்குப் புத்துயிர் ஊட்டியதன் விளைவாக, ஆண்டுக்கு ஒரு சதுர கிலோமீட்டருக்கு 20-30 டன் வரை மீன் பிடிப்பு அதிகரித்துள்ளது. இது சூழலியல் மீட்பு மற்றும் பொருளாதார வாய்ப்புகளை வளர்க்க உதவியிருக்கிறது. பாக் நீரிணையில் தேவையற்ற மீன்பிடிப்புகளை குறைப்பதற்கான சாதனங்களை அறிமுகப்படுத்தி சுற்றுச்சூழல் பாதிப்புகளும் குறைக்கப்பட்டுள்ளன. மேலும், மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணைப் பகுதிகளில் இருந்து 30,000 கிலோவுக்கும் அதிகமான கடல் குப்பைகள், கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் மீட்புத் திட்டம் மூலம் அகற்றப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் மறுசீரமைப்பை நிலையான வருமானத்துடன் இணைக்கும் வகையில், நிராகரிக்கப்பட்ட உபகரணங்களை வாழ்வாதாரப் பொருட்களாக மாற்றுவதற்கு மீனவப் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது.

மீனவர் நண்பன் மொபைல் செயலி (FFMA) போன்ற முக்கிய முயற்சிகள் மூலம், ஒன்பது மாநிலங்களில் 1.22 லட்சத்துக்கும் அதிகமான மீனவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். நிகழ்நேர வானிலை அறிவிப்புகள், கடல் நிலவரங்கள் மற்றும் சந்தைப் போக்குகள் குறித்த தகவல்களைப் பெறுவதன் மூலம், அவர்களின் பாதுகாப்பும் வருமானமும் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் சிறு மீனவர்கள் ஆண்டுக்கு ₹1,00,000 வரை லாபம் ஈட்டுவதாகவும் தெரிவிக்கின்றனர். INCOIS உடனான ஒத்துழைப்பு, 200,000 க்கும் மேற்பட்ட மீனவர்களுக்கு கடல் நிலவர முன்னறிவிப்புகள், ஆலோசனைகள் மற்றும் பேரிடர் எச்சரிக்கைகளை வழங்குகிறது. இது "கொண்டல்காற்று எச்சரிக்கைகள்" போன்ற உள்ளூர்மயமாக்கப்பட்ட புதுமையான செயல்பாடுகளுக்கு உத்வேகம் அளித்துள்ளது.

மீன் பிடிப்பிற்குப் பிந்தைய மீன்வளத்தில், HACCP தரத்திலான மீன் பதப்படுத்தும் மையம், 2000 டன்களுக்கு மேல் மீன்களைப் பதப்படுத்தியிருக்கிறது; 10 கிராமங்களைச் சேர்ந்த மீனவப் பெண்களுக்கு சூரிய ஒளியில் உலர்த்தப்பட்ட கருவாடுகளை உற்பத்தி செய்வதன் மூலம் மாதந்தோறும் ₹3,000-₹5,000 கூடுதல் வருமானம் ஈட்ட உதவியிருக்கிறது. கருவாடு வகைகளின் ஊட்டச்சத்து விவரக்குறிப்பு, உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்த்துப் போராடுவதில் கருவாடுகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அதே நேரத்தில் 52 புதுமையான மீன், கருவாடு தயாரிப்புகள், ஊட்டச்சத்தையும், வருமானத்தையும் அதிகரித்துள்ளன. பெண்களுக்கான பிரத்யேக இணையவழி கல்வி முயற்சிகள் 6,000 பெண்களுக்கு மீன் பிடிப்பிற்குப் பிந்தைய நடைமுறைகள், டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மற்றும் நிதிசார் கல்வியறிவு ஆகியவற்றில் பயிற்சி அளித்துள்ளன. மீனவப் பெண்கள் இணைப்பு (FisherwomenConnect) செயலி பாரம்பரிய நடைமுறைகளை நவீன சந்தைகளுடன் இணைத்து வாங்குபவர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் உள்ள தொடர்பை வலுப்படுத்துகிறது.



மீன் வளர்ப்பில், 64 கிராமங்களில் உள்ள ஒருங்கிணைந்த மீன் பண்ணை அமைப்பு (ஒரு ஆண்டுக்கு ஒரு ஹெக்டேருக்கு ₹110,369 என்ற வருவாயை ஈட்டி, உற்பத்தித்திறன் ஆதாயங்களை நிரூபித்திருக்கிறது; தமிழ்நாட்டின் கடலூர் மாவட்டத்தில் உள்ள ஒருங்கிணைந்த சதுப்பு நில மீன் வளர்ப்பு அமைப்பு 5,000 -க்கும் மேற்பட்ட சதுப்பு நில மரக்கன்றுகளை உருவாக்கி அதன் மூலம் 457 கிலோ மீன் மற்றும் நண்டுகளை உற்பத்தி செய்து, 35 பயனாளிகளுக்கு ₹3,87,705 என்ற வருவாயை ஈட்டித் தந்திருக்கிறது. இதன்மூலம் காலநிலை தாக்கத்தை எதிர்கொண்டு விரிவுபடுத்தக்கூடிய மீளும் மாதிரிகளை எடுத்துக்காட்டியிருக்கிறது. சிறப்பு மீன் வளர்ப்பு முயற்சிகளில் 52.8% உயிர்வாழும் வீதத்துடன் ₹2,71,000 வருமானத்தை தந்திருக்கும் கொடுவா மீன் (Seabass) வளர்ப்புப் பண்ணையும் உள்ளடங்கும். எளிதாக மாற்றக்கூடிய கெண்டை மீன் குஞ்சு பொரிப்பகங்கள் நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட குஞ்சுகளை உற்பத்தி செய்வதும் இதில் அடங்கும்.

பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் 1,146 முன்னெடுப்புகள் மூலம் 110,000 க்கும் மேற்பட்ட நபர்களுக்கு பயனளித்துள்ளன. கூட்டு முயற்சிகள் மூலம் 67,114 மீனவர்களுக்கு நிலையான நடைமுறைகள் கற்றுத் தரப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 900 மாணவர்கள் சான்றிதழ் படிப்புகளை முடித்துள்ளனர்; மேலும் மீனவப் பெண்கள் மேம்படுத்தப்பட்ட சந்தை இணைப்புகளின் வழியாக, கருவாடு விற்பனையில் ₹2,48,268 என்ற தொகையை ஈட்டியிருக்கின்றனர்.

''ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி'' போன்ற கல்வி முயற்சிகள் 600 பள்ளி மாணவர்களை ஈடுபடுத்தியுள்ளன; அதே நேரத்தில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் 1,000 க்கும் மேற்பட்ட இருளர் குடும்பங்களுக்கு ஆதரவளித்துள்ளன. கிராம அறிவு மையங்களின் கடலோர கட்டமைப்பு 192 கிராமங்களை இணைத்து, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை ஊக்குவித்து வருகிறது.

இவ்வாறு, புதுமையான உத்திகள் நிலைத்தன்மை மற்றும் மீள்திறனுக்கான FRTC -ன் முழுமையான அணுகுமுறை, மீன்வளம் மற்றும் கடலோர வாழ்வாதாரங்களுக்கு ஒரு தர அளவுகோலை நிறுவியிருக்கிறது. இது இந்தியாவின் கடற்கரைகளுக்கும் அதற்கு அப்பாலும் நம்பிக்கையையும் மற்றும் மேம்பாட்டை உறுதிசெய்யும் பாரம்பரியத்தையும் வழங்குகிறது.



# எங்கள் பணிகளால் ஏற்பட்ட விளைவுகள்

## 1.22 லட்சம்

### மீனவர்களுக்கு அதிகாரமளிப்பு

மீனவர் நண்பன் மொபைல் செயலி (FFMA) மூலம், பாதுகாப்பு அறிவுறுத்தல்கள், வானிலை நிலவர நிகழ்நிலைத் தகவல்கள் மற்றும் செயல்பாடுகளில் ஆபத்து குறைப்பு ஆகியவை 66 கடலோர மாவட்டங்களில் 1.22 லட்சம் பயனாளிகளைச் சென்றடைந்திருக்கின்றன.

## 33.3 டன்கள்

### மீட்கப்பட்ட கடல் குப்பைகள்

மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணைப் பகுதிகளில் 208.5 ஹெக்டேர் பரப்பளவில் 9,528 கிலோ கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் உட்பட 33,360 கிலோ (33.3 டன்கள்) கடல் குப்பைகள் மீட்கப்பட்டன.

## 20

### மீன்வள கூட்டு மேலாண்மை குழுக்கள்

கடலோர சமூகங்களில் பங்கேற்புள்ள மீன்வள மேலாண்மை மற்றும் நிலைத்தன்மைக்கு ஆதரவளிக்க ஆதரிக்க 20 கிராம கூட்டு மேலாண்மை குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

## ₹32,00,00

### மீனவப் பெண்களால் திரட்டப்பட்ட வருவாய்

மீனவப் பெண்களின் தொழில் முனைவு நடவடிக்கைகள் 200 டன்களுக்கு மேல் மீன் மற்றும் இறால்களைப் பதப்படுத்தி, நிலையான வருமான ஆதாரத்தை உருவாக்கியுள்ளன.

## 2,500

### செயற்கைப் பவளப்பாறைகள் நிறுவப்பட்டன

## 25%

### மீன் உற்பத்தி அதிகரிப்பு

2,500 பவளப்பாறைகளை நிறுவியதன் விளைவாக நிலையான மீன்வள ஆதார மேம்பாடு சாத்தியமாகியிருக்கிறது. கடலோர நீர்ப்பகுதிகளில் மீன் உற்பத்தியை கணிசமாக செயற்கைப் பவளப்பாறைகள் உயர்த்தியிருக்கின்றன. இதன்மூலம் மீனவக் குடும்பங்களுக்கு கிடைக்கும் வருவாய் அதிகரித்திருக்கிறது.

## 210

### ஒருங்கிணைந்த மீன் பண்ணை அமைப்புகள் தொடங்கப்பட்டிருக்கின்றன

பல்லுயிர் பெருக்கம் மற்றும் வாழ்வாதாரங்களை ஆதரிக்க ஒருங்கிணைந்த சதுப்பு நில பாதுகாப்புடன் மீன் வளர்ப்பு இணைக்கப்பட்டது.

## 30%

### மேம்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன்

சமூகத்துடன் இணைந்த நடவடிக்கைகள் மீன் வளர்ப்பு உற்பத்தித்திறனில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளுக்கு வழிவகுத்தன.

## 110,902

### பயிற்சி பெற்றவர்கள்

## 1,146

### பயிற்சி திட்டங்கள்

மீனவர்கள் மற்றும் கடலோர சமூகங்களின் திறன்களையும் அறிவையும் மேம்படுத்தும் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.



# மீள்திறனை உருவாக்குதல்:

## அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் (FRTC)

### நிறுவப்பட்ட ஆண்டு: டிசம்பர் 26, 2009

2004 சுனாமியால் ஏற்பட்ட பேரழிவிலிருந்து மீனவ சமுதாயத்தை மீட்டெடுக்கும் முயற்சியாக, **எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை (MSSRF)**, டாடா டிரஸ்ட் – ன் ஆதரவுடன், மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகாரில் **அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தை** துவக்கியது. **சமூகம் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சியளிப்பு முன்னெடுப்புகளின் மூலம் நிலைப்புத்தன்மையுள்ள கடலோர சமூக முன்னேற்றம் மற்றும் பேரிடரிலிருந்து மீண்டெழும் திறனை** வளர்க்கும் தொலைநோக்குடன் இந்த மையம் அமைக்கப்பட்டது.





## மையத்தின் தோற்றம்

டிசம்பர் 26, 2004, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் மனித உயிர்கள் மற்றும் இயற்கை சீற்றத்தின் நவீன வரலாற்றில் மிகவும் துயரமான நாள். அன்று சுமத்ரா பகுதியில் ரிக்டர் அளவில் 9.1 என மதிப்பிடப்பட்ட நிலநடுக்கம், மார்ச் 28, 1964 க்குப் பிறகு உருவான, மிக வலுவான சுனாமியை உருவாக்கியது. தேசிய சுற்றுச்சூழல் புள்ளிவிவர மையத்தின்படி, இந்தியப் பெருங்கடல் சுனாமியால் 2,27,898 பேர் உயிரிழந்தனர் அல்லது காணாமல் போனதாகப் பட்டியலிடப்பட்டு இறந்ததாகக் கருதப்பட்டனர். 10-40 அடி உயரம் கொண்ட அலைகள் கடற்கரைகளைத் தாக்கி, கடற்கரைகள், கட்டிடங்கள் மற்றும் முழு கிராமங்களையும் மூழ்கடித்து, பின்னர் கடலுக்குள் திரும்பியதால் பேரழிவு ஏற்பட்டது. தமிழ்நாட்டின் 13 கடலோர மாவட்டங்களும் பாதிக்கப்பட்டன ஆனால் நாகப்பட்டினத்தில் மிக மோசமான இழப்புகள் பதிவாகின. அங்கு 6,065 பேர் இறந்தனர். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 85% பேர் மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள்; இது அவர்களை பெரும் அதிர்ச்சி, பயம் மற்றும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கியது; மேலும் சுனாமிக்குப் பிந்தைய சூழ்நிலைக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொண்டு தங்கள் வாழ்வாதாரங்களை மீண்டும் உருவாக்க அவர்கள் கடுமையாக போராட வேண்டியிருந்தது. பேரழிவை ஏற்படுத்திய இந்த நிகழ்விற்குப் பிறகு, பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் பேரிடரை எதிர்கொள்ளும் தயார்நிலை ஆகியவை, இந்தியப் பெருங்கடலையொட்டி அமைந்துள்ள அனைத்து கடலோர நாடுகளின் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் ஒரு பகுதியாக மாறியது. எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் பேரிடருக்கு பதில்வினையாற்றும் விதத்தில், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் கடலோர சமூகங்களின் மீள்திறனை உருவாக்க கள அளவில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. டிசம்பர் 26, 2009 அன்று, டாடா டிரஸ்ட் ன் நிதி உதவியுடன், தமிழ்நாட்டின் பூம்புகார் மீனவ கிராமத்தில் "அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம்" என்ற பெயரில் சமூக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தை MSSRF நிறுவியது. இதன் நோக்கம் நிலையான முன்னேற்றத்திற்கான நடைமுறைகளை ஊக்குவிப்பதில் ஒருங்கிணைந்த முயற்சியை முன்னெடுப்பதாகும்.

## அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் (FRTC)

மீன் வள மேலாண்மை, நிலையான வாழ்வாதார வாய்ப்புகள், பேரிடரை எதிர்கொள்ளும் தயார்நிலை மற்றும் மேலாண்மை ஆகியவற்றில் ஒரு முழுமையான, கூட்டு அணுகுமுறையை செயல்படுத்துவதற்கான நீண்ட கால உத்தியின் ஒரு பகுதியாக, சுனாமிக்குப் பிறகு கடலோர சமூகங்களுடனான கலந்துரையாடல்களின் போது வெளிப்படுத்தப்பட்ட தேவைகளின் அடிப்படையில் இந்த மையம் உருவாக்கப்பட்டது. இம்மையம் பயிற்சி மற்றும் செயல்விளக்க அமைவிடமாக செயல்படுகிறது. வாழ்வாதாரங்களை வலுப்படுத்தவும் பன்முகப்படுத்தவும், கடலோர சமூகங்களுக்கு மாற்று பொருளாதார நடவடிக்கைகளை அடையாளம் காணவும், செயல்முறை சங்கிலிக்கு (மீன்பிடித்தல் / வளர்ப்பு, வணிகமயமாக்கல் மற்றும் நுகர்வு) மதிப்பு கூட்டவும், தொடர்புடைய அனைத்து பங்காளர்கள் மற்றும் நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு பங்கேற்பு அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் இது செயல்படுகிறது.

காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப மீனவர்களின் தகவமைத்துக் கொள்ளும் திறனை உருவாக்குவதற்கும், பாதிப்பிலிருந்து மீண்டெழும் திறன் கொண்டவர்களாக மாற்றுவதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதே இந்த மையத்தின் முக்கிய நோக்கமாகும். இது, பங்கேற்புள்ள ஆராய்ச்சி, மாற்றத்தை ஏற்று செயல்படுத்துவது குறித்த விழிப்புணர்வை உருவாக்குதல், நிலையான மீன்பிடிப்பு மற்றும் சுற்றுச்சூழல் நடைமுறைகளின் முக்கியத்துவம்; வாழ்வாதார விருப்பங்களைப் பன்முகப்படுத்துதல்; கடலோர மற்றும் கடல் பல்லுயிர் பெருக்கத்தை வலுப்படுத்த மீனவர்களின் வலையமைப்பை உருவாக்குதல்; முக்கிய தொடர்புடைய மற்றும் நிகழ்நேர அடிப்படையிலான அறிவியல் தகவல்களுக்கான அணுகலை ஏதுவாக்குதல்; மற்றும் மலிவான செலவில் மற்றும் ஆற்றல் திறன் கொண்ட தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி முன்கூட்டியே எச்சரிக்கை செய்திகளை வழங்குதல், அத்துடன் கடல்சார் எல்லைக்கோடு, ஆபத்து மண்டலங்களில் மேம்பட்ட பாதுகாப்பை இலக்காகக் கொண்டு செயல்படுதல் மற்றும் கடலோரப் பகுதிகளில் மற்றும் கடலில் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் மூலம் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## எங்கள் மைய செயல்பாடுகளின் வரம்பெல்லை

அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் (FRTC) இந்தியாவின் பல கடலோர மாநிலங்களில் தனது செயல்திட்ட வரம்பெல்லையை விரிவுபடுத்தி கடலோர சமூகங்கள் மற்றும் கடல் சார்ந்த சூழல் அமைப்புகளில் பரவலான தாக்கத்தை உறுதி செய்கிறது. இந்த மையம், அதன் மீனவ நண்பன் திட்டம் மூலம் இந்தியாவின் அனைத்து கடலோர மாநிலங்களிலும் தனது செயற்பரப்பை விரிவுபடுத்துகிறது. வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான திட்டங்கள் தமிழ்நாடு, புதுச்சேரி, ஆந்திரப் பிரதேசம், ஒடிசா, கேரளா மற்றும் கர்நாடகா உள்ளிட்ட 6 மாநிலங்களில் செயல்படுத்தப்படுகின்றன. இது, 6 மாநிலங்களில் 22 க்கும் மேற்பட்ட கடலோர மாவட்டங்கள் இத்திட்டத்தினால் பயனடைகின்றன.


இந்த விரிவான புவியியல் இருப்பு, இந்தியாவின் பல்வேறு கடலோரப் பகுதிகளில் நிலையான கடலோர மேம்பாடு, வள மேலாண்மை மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் இந்த அமைப்பின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

## புவியியல் வரம்பெல்லை

மீனவ நண்பன் மொபைல் செயலி




வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான திட்டங்கள்





# கவனம் செலுத்தப்படும் நான்கு முக்கிய அம்சங்கள்

- மீன் வள மேலாண்மை மற்றும் மேம்பாடு
- மீன்பிடிப்பிற்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் மற்றும் வாழ்வாதார மேம்பாடு
- மீன் வளர்ப்பு வள மேலாண்மை மற்றும் மேம்பாடு
- பயிற்சி மற்றும் திறன் உருவாக்கல்





# முக்கிய மேம்பாடு நடவடிக்கைகள்



பொறுப்பான மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள மீன்வளத்தை ஊக்குவித்தல்



சரியான வலை தெரிவு - தேவையற்ற மீன்பிடிப்புகளை குறைக்கும் சாதனங்கள்



சமூகத்தால் நிர்வகிக்கப்படும் செயற்கைப் பவளப்பாறை திட்டம்




கடல் காலநிலையை அளவிடும் மற்றும் கண்காணிக்கும் கருவிகள்



கடல் பாதுகாப்பு மற்றும் இடர் குறைப்பு



அறுவடைக்கு பிந்தைய மீன் பதப்படுத்தல் மற்றும் மதிப்புக்கூட்டல்



கடலோர மற்றும் சதுப்பு நிலப் பகுதிகளில் கடல் உயிரின வளர்ப்பினை ஒருங்கிணைத்தல்



நவீன மற்றும் பாரம்பரிய தகவல் தொழில்நுட்பங்கள் மூலம் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு



கிராமப்புறங்கள் மற்றும் மீனவ கிராமங்களில் "ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி" திட்டம்



நிலையான வாழ்வாதார விருப்பத்தேர்வுகளை ஊக்குவித்தல் மேம்படுத்துதல்

# அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம்: 15 ஆண்டுகளின் பயணம்

2009-ல், தமிழ்நாட்டின் பூம்புகாரில் அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் நிறுவப்பட்டது. நிலையான மீன்வள மேலாண்மையை ஊக்குவிப்பதும் கடலோர சமூகங்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும். கடந்த 15 ஆண்டுகளில், புதுமை, ஒத்துழைப்பு மற்றும் சமூக மேம்பாடு ஆகிய அம்சங்களோடு ஒரு சிறப்பான பயணத்தை மேற்கொண்டு சேவையாற்றி வருகிறது.

## ஆரம்பக் காலம் (2009-2012)

இம்மையத்தின் கவனம் தொடக்கத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் நிவாரண நடவடிக்கைகளிலும், மீனவர்கள், பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு பொருட்கள், பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை வழங்குவது மீதும் இருந்தது. இதில் நிலையான மீன்பிடிப்பு நடைமுறைகள், மீன்களைப் பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் குறித்த பயிற்சிகள், அடங்கும். சமூக அடிப்படையிலான மீன்களைப் பதப்படுத்தும் தொழிலகம் நிறுவப்பட்டது; இது பெண்களுக்கு மீன்களைப் பதப்படுத்துவதில் பயிற்சியையும், வாய்ப்புகளையும் வழங்கியது.

## இலக்கு நிர்ணயம் மற்றும் புதுமை (2013-2016)

வளரத்தொடங்கிய இம்மையம், சிறிய அளவில் ஈடுபடுகின்ற மீன்வள செயல்பாடுகளை மேம்படுத்துவதில் சிறப்பு கவனத்துடன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகளை உள்ளடக்கியதாக தனது செயற்பரப்பை விரிவுபடுத்தியது. இம்மையத்தின் முக்கிய புத்தாக்க செயல்பாடுகளில் சூரிய ஒளியில் இயங்கும் மீன்உலர்த்தி சாதனத்தை அறிமுகப்படுத்தி, கருவாடுகளின் தரத்தையும், பாதுகாப்பையும் உயர்த்தியது, சமூகத்தால் நிர்வகிக்கப்படும் செயற்கைப் பவளப்பாறைகள் (மீன்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் மீன்பிடிப்பிலுள்ள அழுத்தத்தைக் குறைத்தல்) மற்றும் ஆண்ட்ராய்டு செயல்தளங்களில் மீனவ நண்பன் மொபைல் செயலியை அறிமுகப்படுத்துதல் (வானிலை முன்னறிவிப்புகள், மீன் சந்தைகள் மற்றும் மீன்பிடி விதிமுறைகள் பற்றிய முக்கியமான தகவல்களை வழங்குதல்) ஆகியவை அடங்கும்.

## செயற்பரப்பையும், புவியியல் இருப்பிடத்தையும் விரிவுபடுத்துதல் (2017-2020)

மீன்வள மேம்பாட்டுத் திட்டங்கள், பங்கேற்புடன் மீன்வள மேலாண்மை, மீன்வள நிறுவனங்களை உருவாக்குதல், அடிமட்ட நிறுவனங்களை ஒன்றிணைக்கும் கூட்டு செயல்பாடு உட்பட, நிலைப்புத்தன்மையுள்ள கடல்சார் மீன்வளத்தை மேம்படுத்தும் குறிக்கோளுடன் இம்மையம் தனது செயல்பாட்டை விரிவுபடுத்தியது. இதில் பெண்களின் தலைமைத்துவம் மற்றும் தொழில்முனைவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

## முக்கிய செயல்பாட்டு பகுதியை விரிவுபடுத்தல் மற்றும் வளர்ச்சி (2020-தற்போது வரை)

இன்று, அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் இந்தியாவில் ஒரு தனித்துவமான அமைப்பாகும்; இது அறிவியலை சமூகத்துடன் இணைத்து நிலையான மீன்வள மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் சமூக மேம்பாட்டை ஊக்குவிக்கிறது. ஆயிரக்கணக்கான மீனவர்கள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகளுடன் இணைந்து செயல்படுகின்ற இம்மையம் தனது சேவையின் செயற்பரப்பை பல மாநிலங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது. கடல் குப்பை மேலாண்மை, காலநிலை மீள்திறன், மீன்வள ஆளுகை-இணைமேலாண்மை, மீன்பிடிப்பிற்கு பிந்தைய மீன்வளம், தொழில்நுட்பம், சந்தை அணுகல் மற்றும் கொள்கையை பரிந்துரைத்தல் ஆகியவற்றில் இம்மையத்தின் தற்போதைய முயற்சிகள் கவனம் செலுத்துகின்றன.

# 15 ஆண்டுகளில் "அனைவருக்கும் மீன் மையத்தின்" குறிப்பிடத்தக்க சாதனைகள்


கடந்த 15 ஆண்டுகளில், அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் நிலைப்புத்தன்மையுள்ள புதுமை பயணத்தை முன்னெடுத்து மீனவ மக்களின் வாழ்க்கையையும், வாழ்வாதாரங்களையும் மேம்படுத்தியிருப்பதுடன், கடல்சார் சூழலமைப்புகளை மீட்டெடுத்திருக்கிறது.


மாற்றத்தை இந்த மையம் எவ்வாறு நிகழ்த்தியிருக்கிறது:

## கடல்சார் சூழலமைப்புகளை மீட்டெடுத்து புத்துயிரளித்தல்

### மீன் வளத்திற்கு புத்துயிர் அளிக்கும் செயற்கைப் பவளப்பாறைகள்

தூத்துக்குடி, டி.ஆர். பட்டினம் மற்றும் பூம்புகார் பகுதிகளில், அமைத்துள்ள செயற்கை பவளப்பாறைகள் மீன்களுக்கான வளமையான உறைவிடமாக வளர்ந்து, அருகிலுள்ள சிறு மீனவர்களுக்கு வருமானத்தை மேம்படுத்தி, நீடித்த மீன்பிடிக்கான நிலைத்தன்மையை உறுதி செய்கின்றன. இவை சமூகத்தால் நிர்வகிக்கப்படும் வெற்றிகரமான முயற்சிகளின் சின்னமாகும்.






### வளம்குன்றா நிலைப்புத்தன்மையுடன் மீன்பிடிப்பு

இராமேஸ்வரத்தில், இறால் இழுவைப் படகுகளில் சதுரக் கண்ணி வலை மடிப் பகுதிகளை அறிமுகப்படுத்தி, நிலையான இறால் மீன் பிடிப்பிற்கான ஒரு தன்னார்வ நெறிமுறையை உருவாக்கி 75 மீனவர்கள் செயல்படுத்திவருகின்றனர்

### கைவிடப்பட்ட மீன்பிடி பேய்வலைகளை அகற்றும் பாதுகாவலர்கள்

145 தன்னார்வலர்களுடன் இணைந்து, மன்னார் வளைகுடா மற்றும் பாக் வளைகுடாப் பகுதிகளிலிருந்து 33.3 டன் அளவிற்கு மேலான கைவிடப்பட்ட மற்றும் தொலைந்து போன மீன்பிடி வலைகளை மீட்டு சேகரித்துள்ளது. இதன்மூலம் கடல்வாழ் உயிரினங்களையும் அவற்றின் வாழ்விடங்களையும் காப்பாற்றி, நமது பெருங்கடல்களைப் பாதுகாப்பதில் தனது அர்ப்பணிப்பை இந்த மையம் வெளிப்படுத்தி வருகின்றது



# மீன்வள மேம்பாட்டில் பங்கேற்பு மேலாண்மையை வலுப்படுத்துதல்

## கூட்டு மேலாண்மைக் குழுக்கள்

நிலைப்புத்தன்மையுள்ள மீன்வளம் மற்றும் கடல் வள மேலாண்மையை மேம்படுத்துவதற்காகப் பங்கேற்பு அணுகுமுறைகளை முன்னோடியாக செயல்படுத்தியுள்ளது. மீன்வள மேலாண்மை மற்றும் வளங்களின் நிலைத்தன்மை குறித்து முடிவெடுப்பதில் சமூகத்தின் ஈடுபாட்டை உறுதி செய்வதற்காக, கிராம அளவில் 20-க்கும் மேற்பட்ட கூட்டு மேலாண்மை குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.



# தொழில்நுட்பத்தின் மூலம், சமூகங்களுக்கு அதிகாரமளித்தல்

## மீனவ நண்பன் மொபைல் செயலி (FFMA)

66 கடலோர மாவட்டங்களில் உள்ள 1.22 லட்சம் மீனவர்களைச் சென்றடைந்துள்ள இந்த அகில இந்திய செயலி, சரியான நேரத்தில் வானிலை முன்னறிவிப்புகள், கடலின் நிலவரங்கள் மற்றும் கடல் மீன்வளம் தொடர்பான ஆலோசனைகளை வழங்குகிறது. பைலின், ஓகி, தானே மற்றும் கஜா போன்ற புயல்களின் போது இச்செயலி 527 நபர்களின் உயிர்களைக் காப்பாற்றியுள்ளது. மேலும், மீன்பிடிக்க உகந்த பகுதிகள் (PFZs) குறித்த வழிகாட்டுதல்கள் மூலம் மீன்பிடிப்பிற்கான செலவுகளைக் குறைத்து, வருமானத்தை அதிகரித்துள்ளது.






## அலை அளக்கும் மிதவைகள்

INCOIS அமைப்புடன் இணைந்து முட்டம், தருவைகுளம் மற்றும் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் மிதவைகள் நிறுவப்பட்டுள்ளன. இவை நிகழ்நேரத்தில் குறிப்பிட்ட இடத்திற்கான கடல் நிலவரத் தகவல்களை அளவிட உதவுகின்றன. கடலோர சமூகங்களுக்குக் கடல் நிலவர முன்னறிவிப்புகள் மற்றும் கடல் மீன்வளம் தொடர்பான ஆலோசனைகளை செயலி வழியாக வழங்குவதால், மீன்பிடித்தலில் உள்ள அபாயங்களைக் குறைப்பதிலும், செயல்திறனை மேம்படுத்துவதிலும் இது முக்கியப் பங்காற்றியுள்ளது.

## டிஜிட்டல் செயல்பாடுகளில் பெண்களுக்கு கல்வியறிவு

டிஜிட்டல் (இணைய) சந்தைப்படுத்தல், நிதி மேலாண்மை மற்றும் மீன்பிடிப்பிற்குப் பிந்தைய நடைமுறைகளை மையமாகக் கொண்டு, 211 டிஜிட்டல் கல்வியறிவு அமர்வுகள் மூலம் 6,000 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இது டிஜிட்டல் தளத்தில் பெண்கள் செயல்படும் திறனை வலுப்படுத்தியிருக்கிறது.






## டிஜிட்டல் அறிவுப் புரட்சி

121,134 பயனாளிகளை கொண்டிருக்கும் எமது கிராம அறிவு மற்றும் வள மையங்கள் (VRCS/VKCs) டிஜிட்டல் இடைவெளியைக் குறைத்து, கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்புத் தகவல்களுக்கான மையமாகச் செயல்படுகின்றன.

# நிலைத்தன்மைக்காக புதுமையை முன்னெடுத்தல்

## HACCP தரத்தில் பதப்படுத்தும் உற்பத்தி மையம்

பதப்படுத்தப்பட்ட மீன்களின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம், வேறு வழியின்றி குறைந்த விலையில் அவசரமாக விற்பனை செய்வதைத் தடுத்து சிறந்த சந்தை விலையை உறுதி செய்வதற்காக இது நிறுவப்பட்டது. இந்த மீன் பதப்படுத்தும் மையம், மீனவப் பெண்களுக்கு மீன்களை பதப்படுத்தவும் மற்றும் தயாரிப்பு பொருட்களுக்கு மதிப்பைக் கூட்டவும் தேவையான திறன்களை அளித்து, அவர்களைத் தொழில்முனைவோர்களாக மாற்றியுள்ளது.



# பாலின சமத்துவத்தை வலியுறுத்தல் மற்றும் வாழ்வாதாரங்களை முன்னெடுத்தல்



## மகளிர் கூட்டமைப்புகளின் சக்தி

4731 மீனவப் பெண்கள், 200 டன்னுக்கும் அதிகமான மீன்களைப் பதப்படுத்தி, 52 மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்கி, உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்தியுள்ளனர்.

## மீண்டெழும் திறனிலிருந்து உருவான ஒரு புது யுக்தி

160 பங்குதாரர்கள் மற்றும் ₹1,60,000 பங்கு மூலதனத்துடன் செயல்படும் வெற்றிப் பாவை மீனவ மகளிர் உற்பத்தியாளர் நிறுவனம் (VPFWPCL), சூரிய மின்சக்தியில் இயங்கும் உலர்த்திகளைப் பயன்படுத்தி சுகாதாரமான கருவாடு மற்றும் பலவகை மதிப்புக்கூட்டப்பட்ட மீன் பொருட்களைத் தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றுள்ளது.






## ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு பண்ணையம்

210-க்கும் மேற்பட்ட ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு பண்ணைய அமைப்புகள் (IFFS) மூலம், மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, தோட்டக்கலை மற்றும் மண்புழு உரம் தயாரித்தல் ஆகிய செயல்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இது, சிறு விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் வருமானம் கிடைப்பதை உறுதிசெய்து, அவர்களின் நிலைத்தன்மையை மேம்படுத்துகிறது.

# திறன் மேம்பாடு மற்றும் அறிவுப் பகிர்வு

## திறன்களையும் சமூகங்களையும் மேம்படுத்துதல்

நிலைப்புத்தன்மையுள்ள மீன்வளம், புதிய மீன்பிடித் தொழில்நுட்பங்கள், கடல் கழிவு மேலாண்மை, வாழ்வாதாரங்கள் மற்றும் கடலோர மீன்பிடிப்பு நடைமுறைகள் தொடர்பாக 1,146 பயிற்சித் திட்டங்கள் வழியாக, 110,902 நபர்களுக்குத் திறன் மேம்பாடு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.





## அனுபவக் கற்றலுக்கான மையம்

தமிழ்நாடு, புதுச்சேரி, கர்நாடகா மற்றும் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த 1,831-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி நிபுணர்களை இந்த மையம் வரவேற்றுள்ளது. உள்ளகப் பயிற்சிகள், பரிச்சயத்திற்கான வருகைகள் மற்றும் களப்பணிகள் மூலம், கோட்பாட்டிற்கும் நடைமுறைக்கும் இடையிலான இடைவெளியை இம்மையம் குறைத்திருக்கிறது. இதன்மூலம், நிலைப்புத்தன்மையுள்ள மீன்வளம், கடலோரப் பாதுகாப்பு மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றில் வருங்காலத் தலைவர்களுக்கு நேரடியாக செயல்முறைத் திறன்களை இது வழங்குகிறது.

## சமூகக் கட்டமைப்பை மேம்படுத்துதல்

வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், கடலோர வளங்களைச் சிறப்பாக நிர்வகிக்கவும், கூட்டுச் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் விதமாக 120 சுய உதவிக் குழுக்கள் (SHGs), 2 கூட்டமைப்புகள் மற்றும் 4 மீன் வளர்ப்போர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FFPOs) உருவாக்கப்பட்டன.



# வளங்களை சமூகத்திடம் கொண்டு சேர்த்தல்

## ₹9.6 கோடி மதிப்பிலான ஆதாயங்களுக்கு வழிவகுத்தல்

திறம்பட்ட ஒருங்கிணைப்பு மற்றும் வலையமைப்பின் மூலம், 534 மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு ₹9.6 கோடி மதிப்பிலான அரசாங்க நலத்திட்ட உதவிகள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது. இதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்தது.





## வாழ்வாதார தொழில்கள்

நண்டுகளை வளர்ச்சியடையச் செய்தல், கூட்டு மீன் வர்த்தகம், அலங்கார மீன் வளர்ப்பு, மண்புழு உரத் தயாரிப்பு மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட மீன் உற்பத்தி போன்ற உள்ளூர் சார்ந்த தொழில் நிறுவனங்கள் நிறுவப்பட்டன. இவை 922 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தி, அவர்களுக்குப் பயனளித்து வருகின்றன.

# அங்கீகாரம் மற்றும் ஊக்குவிப்பு

## விருதுகள் பெற்ற சிறப்புத்தன்மை

மீன்வளம் மற்றும் சமூக நலன் சார்ந்த தொழில்நுட்பங்களில் செயல்படுத்திய புதுமையான செயற்பணிகளுக்காக, FRTC அமைப்பு 2014 முதல் 2023 வரை ஏழு மதிப்புமிக்க விருதுகளைப் பெற்றிருக்கிறது.









# I

# இயற்கை நீர்நிலைகளிலிருந்து மீன்பிடித்தல் மேலாண்மை மற்றும் மேம்பாடு

# மீனவ நண்பன் கைபேசி செயலி (FFMA): மீனவர்களுக்கு திறனதிகாரமளித்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் தொழில்நுட்பம்

"கடலின் கொந்தளிப்பான சூழல் போன்றவற்றை மீனவர் நண்பன் செயலி மூலம் முன்கூட்டியே அறிந்துகொள்வதால், எங்கள் மீன்பிடிப் பயணங்களைச் சிறப்பாகத் திட்டமிட முடிகிறது. தொழில்நுட்பத்தின் உதவியால் எங்கள் தொழில் பாதுகாப்பானதாகவும், அதிக இலாபமளிப்பதாகவும் மாறியுள்ளது." – சுபாஷ், சின்னங்குடி

'அனைவருக்கும் மீன்' மையத்தின் மீனவ நண்பன் (FFMA) செயலியானது, இந்தியா முழுவதும் உள்ள மீனவர்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பான முன்னெடுப்பாகும். இது ஆங்கிலம் மற்றும் அனைத்து இந்தியக் கடலோர மொழிகளிலும் கிடைக்கிறது.

வானிலை, மீன்பிடிப்பதற்கான சிறந்த பகுதிகள், கடல்சார் முன்கணிப்புகள் மற்றும் சந்தை நிலவரங்கள் போன்ற நிகழ்நேரத் தகவல்களை வழங்குவதன் மூலம், மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், அவர்களின் உடைமைகளைப் பாதுகாக்கவும், தகவலறிந்த தொழில் முடிவுகளை எடுக்கவும் இச்செயலி உதவுகிறது.

ஒரு முன்னோடி முயற்சியாகத் தொடங்கப்பட்ட FFMA, இன்று இந்தியா முழுவதும் ஒன்பது மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 66 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1.22 லட்சத்திற்கும் அதிகமான மீனவர்களுக்குப் பயனளிக்கும் தேசிய அளவிலான ஒரு செயலியாக வளர்ந்துள்ளது.

பயனாளிகளை மையமாகக் கொண்ட வடிவமைப்பு, தொடர்ச்சியான புத்தாக்கம் மற்றும் மீனவர்களின் விரல் நுனியில் தொலைபேசி வழியாக கிடைக்கும் முக்கியத் தகவல்கள் ஆகியவை இச்செயலியை மீனவர்களின் உயிர்காக்கும் துணைவனாக மாற்றியுள்ளது.


பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளை வரைபடமாக்குதல், மீன்பிடிக்கத் தடை செய்யப்பட்ட மண்டலங்களை நெருங்கும்போது எச்சரிக்கை செய்தல் இதில் இருப்பதால், இது பாரம்பரிய அறிவையும் நவீன தொழில்நுட்பத்தையும் வெற்றிகரமாக ஒருங்கிணைத்திருக்கிறது.

இதன் புவி-வேலி (Geo-fence) தொழில்நுட்பம், தடைசெய்யப்பட்ட பகுதிகளை மீனவர்கள் நெருங்கும்போது எச்சரிக்கை செய்வதன் மூலம், அவர்கள் முக்கியமான கடல் உயிரினங்களின் இனப்பெருக்கப் பகுதிகளுக்குள் செல்வதைத் தடுக்கிறது.

ஒடிசாவில், இந்த புத்தாக்க நடவடிக்கை அழிவின் விளிம்பில் உள்ள ஆலிவ் ரிட்லி ஆமைகளைப் பாதுகாப்பதுடன், அபராதங்களை குறைப்பதன் வழியாக, மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து வருகிறது.

FFMA-ன் வளர்ச்சி, அதன் விரிவாக்கத் திறனை மட்டுமல்லாது, ஒவ்வொரு பிராந்தியத்தின் தனிப்பட்ட சவால்களுக்கு ஏற்ப தன்னை மாற்றியமைக்கும் தன்மையையும் காட்டுகிறது. இதன் மூலம், இந்தியாவின் மீன்வளத் துறையில் புதுமை, உள்ளூர்மயமாக்கல் மற்றும் சமூகத்தை மையமாகக் கொண்ட தீர்வுகள் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.





# சமூகத்தால் நிர்வகிக்கப்படும் செயற்கைப் பவளப்பாறைத் திட்டம்: மீன்வளத்தையும், நிலைப்புத்தன்மையுள்ள வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துதல்.

மன்னார் வளைகுடா மற்றும் சோழமண்டலக் கடற்கரையில் சமூகப் பங்களிப்புடன் நிறுவப்பட்ட செயற்கைப் பவளப்பாறைத் திட்டம், மீன்வள ஆதாரங்களைப் பெருக்குவதிலும், சிறு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும் பெரும் வெற்றியை அடைந்துள்ளது.

## முக்கிய விளைவுகள்:

1. இப்பவளப்பாறைகள், கணவாய், கத்தாளை, களவா போன்ற மதிப்புமிக்க மீன் இனங்களுக்கு வாழ்விடமாக மாறியுள்ளதால், மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது. தூண்டில் மற்றும் செவுள் வலைகள் போன்ற மீன்பிடி உபகரணங்களுக்கு ஆதரவளித்துள்ளது.
2. செயற்கைப் பவளப்பாறைகள் அமைக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றி மீன்வளம் கணிசமாகப் பெருகியிருப்பதை இந்நடவடிக்கைக்குப் பிந்தைய ஆய்வுகள் உறுதி செய்கின்றன.
3. சூழலியல் மறுசீரமைப்புடன் சமூக நிர்வாகத்தையும் இந்த முன்னெடுப்பு இணைத்திருப்பதால், நிலைதன்மையுள்ள மீன்வளப் பயன்பாடு உறுதி செய்யப்படுகிறது. பாரம்பரிய மீனவ சமூகத்தினருக்குப் புதிய பொருளாதார வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன.
4. 2002-ல் வான் தீவுப் பகுதியில் நடத்தப்பட்ட ஆய்வில், ஆண்டுக்குச் சராசரியாக ஒரு சதுர கிலோமீட்டருக்கு 20-30 டன் மீன்கள் கிடைத்ததுதெரிய வந்தது. இது செயற்கைப் பவளப்பாறைகளின் செயல்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.





## சமூக நிர்வாகம் மற்றும் மேலாண்மை

சமூகப் பிரதிநிதிகளைக் கொண்ட கிராம அளவிலான கடல் மேலாண்மைக் குழுக்கள், இப்பவளப்பாறைகளை நிர்வகிப்பதன் மூலம், சமூக உறுப்பினர்களால் முடிவெடுக்கப்படுதல் மற்றும் நிலையான வள மேலாண்மை உறுதி செய்யப்படுகின்றன.







# பூ இறால் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்: பாக் வளைகுடா பகுதியில் நிலைத்தன்மையுள்ள மீன்பிடிப்பை ஊக்குவிக்கிறது

பாக் வளைகுடா பகுதியில், வணிக ரீதியான இறால் பிடிப்பைப் பாதிக்காமல், தேவையற்ற மீன்பிடிப்பைக் (Bycatch) குறைக்கும் கருவிகளின் செயல்திறன் ஒரு முன்னோடி முயற்சி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

### முக்கிய முடிவுகள்:

சதுரக் கண்ணி வலைமடி, வளர்ச்சியடையாத மீன் குஞ்சுகளை தவிர்க்கும் மற்றும் இறால்களை பிரித்தெடுக்கும் சாதனம் (IFE-SSD) மற்றும் ஆமைகள் வலையில் சிக்குவதை தவிர்க்கும் சாதனம் போன்ற சிறப்பு உபகரணங்களைப் பயன்படுத்தியபோது, வழக்கமான இழுவை வலைகளுடன் ஒப்பிடுகையில், தேவையற்ற கடல்வாழ் உயிரினங்கள்  பிடிபடுவது கணிசமாகக் குறைந்தது.

குறிப்பாக, சதுரக் கண்ணி வலைமடியைப் பயன்படுத்தியபோது, இறால் பிடிப்பு குறையாமல், தேவையற்ற மீன்பிடிப்பு ஒரு மணி நேரத்திற்கு 3-5 கிலோ வரை குறைந்தது.



### சூழலியல் மற்றும் பொருளாதார ரீதியிலான நன்மைகள்:

1. தேவையற்ற மீன்பிடிப்பைக் குறைப்பதால், இளம் மீன்களும், மீன் குஞ்சுகளும், பிற கடல் உயிரினங்களும் பாதுகாக்கப்படுகின்றன. இது அவை முழுமையாக வளர்ந்து, நல்ல சந்தை மதிப்பை அடைய உதவுகிறது.
2. இந்த அணுகுமுறை, கடலின் சூழலியல் நிலைப்புத்தன்மைக்கு ஆதரவளிப்பதோடு, மீனவர்களுக்கு நீண்டகாலப் பொருளாதார ஆதாயங்களையும் வழங்குகிறது.

### பங்குதாரர் ஆலோசனை மற்றும் ஏற்றுக்கொள்வது

1. "நிலையான பூ இறால் மேலாண்மைக்கான தன்னார்வ நெறிமுறைத் தொகுப்பு" உருவாக்கப்பட்டு, 526 மீனவர்கள் பங்கேற்ற 22 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.
2. மீன்வளப் பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்த ஆமைகளைப் பாதுகாப்பாக மீட்பது குறித்த வழிகாட்டி கையேடு 500 மீனவர்களுக்கு வழங்கப்பட்டது.
3. 2022-ல் ராமேஸ்வரத்தில், இறால் பிடிப்பிற்கு  சதுரக் கண்ணி வலைமடிகள் பயன்படுத்துவது மீது பங்காளர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.
4. தேர்வு செய்யப்பட்ட 75 முன்னோடி மீனவர்களுக்கு 25 மி.மீ. சதுரக் கண்ணி வலைமடிகள் வழங்கப்பட்டன. அவைகளைப் பயன்படுத்தவும், மேலதிக பகுப்பாய்விற்கு வர்த்தக ரீதியிலான மீன்பிடிப்பு தரவுகளைப் பகிர்ந்து கொள்ளவும் அவர்கள் பொறுப்புறுதி ஏற்றிருக்கின்றனர்.
5. இந்த ஒருங்கிணைந்த முயற்சிகள், பாக்கு வளைகுடா பகுதியில் நிலையான மீன்பிடி முறைகளை ஊக்குவித்து, கடல் சூழலைக் காத்து, பூ இறால் மீன்வளத்தின் நீண்டகால நம்பகத்தன்மையை உறுதி செய்கின்றன.



# கைவிடப்பட்ட வலைகளை மறுசுழற்சி செய்தல்: கடல் குப்பைகளைக் குறைக்கும் சமூக முயற்சி

"கைவிடப்பட்ட மீன்பிடி வலைகளால் கடல் உயிரினங்களுக்கும் எங்கள் வாழ்வாதாரத்திற்கும் ஏற்படும் பாதிப்பை MSSRF மூலம் அறிந்தோம். என் குழுவினருடன் இணைந்து 10.5 ஹெக்டேர் கடல் பகுதியில் இருந்து 1,500 கிலோவுக்கு மேற்பட்ட குப்பைகளை நாங்கள் அகற்றியுள்ளோம். வலைகளில் சிக்கிய ஏழு ஆமைகளையும் சில டால்பின்களையும் மீட்டுள்ளோம். இந்த முயற்சிக்காக எனக்கு 'கடல் காப்பான்' விருது கிடைத்தது; கடலைத் தொடர்ந்து பாதுகாக்க இது மேலும் ஊக்கமளிக்கிறது." என்கிறார் மீனவரான திரு. களஞ்சியம்.

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் (MSSRF), UNDP-SGP, HCL அறக்கட்டளை போன்ற அமைப்புகளுடன் உள்ளூர் மீனவ சமூகமும் இணைந்து, கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்களால் ஏற்படும் மாசுபாட்டைக் கையாள்வதில் மாபெரும் வெற்றியை ஈட்டியுள்ளது. மீனவ சமூகத்தால் முன்னெடுக்கப்படும் இத்திட்டம், கடல்சூழலமைப்பை மீட்டு சீரமைப்பதிலும், மீள்திறன் கொண்ட கடலோர சமூகங்களை உருவாக்குவதிலும் கூட்டு முயற்சியின் சக்தியை நிரூபிக்கிறது.

## முக்கிய சாதனைகள்:

1. கடற்கரை, கடல் மற்றும் தீவு பகுதிகளில் நடத்தப்பட்ட 75 தூய்மைப் பணிகள் மூலம், 12,527.5 கிலோ கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் உட்பட மொத்தம் 33,360 கிலோ கடல் கழிவுகள் அகற்றப்பட்டன.
2. கைவிடப்பட்ட வலைகளில் சிக்கியிருந்த 20 ஆமைகள் மற்றும் 10 டால்பின்கள் தன்னார்வலர்களால் மீட்கப்பட்டு, பாதுகாப்பாகக் கடலில் விடப்பட்டன.
3. மொத்தத்தில் 210 ஹெக்டேர் பரப்பளவில், கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்களை சேகரிக்கும் பணி செய்யப்பட்டிருக்கிறது.
4. மீனவர்கள் உட்பட, 2,207-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் இத்தூய்மைப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.
5. 672+507 மீனவர்கள் மற்றும் 406 பள்ளி மாணவர்களுக்கு கடல் குப்பை மேலாண்மை மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.
6. கைவிடப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களைத் தயாரிக்க 123 மீனவப் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, புதிய வாழ்வாதாரங்கள் உருவாக்கப்பட்டன.
7. 25 மீனவர் சங்கங்கள், 76 படகு உரிமையாளர்கள் மற்றும் 35 இளைஞர் தன்னார்வலர்களின் பங்களிப்பு இத்திட்டத்தின் வெற்றிக்கு முதுகெலும்பாக அமைந்தது.

## உள்ளூர் சமூகங்களுக்கு அதிகாரமளித்தல்

இளைஞர்கள், மீனவர்கள் மற்றும் பெண்கள் என உள்ளூர் சமூகத்தினருக்குக் கடல் பாதுகாப்பில் முழு உரிமையையும் பொறுப்புணர்வையும் இந்த முயற்சி வழங்கியுள்ளது. இதன் மூலம், சுற்றுச்சூழல் உணர்வுள்ள, மீள்திறன் மிக்க கடலோர சமூகத்தை MSSRF கட்டமைத்து வருகிறது.

இந்தக் கூட்டு முயற்சிகள் கடல் பல்லுயிர் பன்முகத்தன்மையை பாதுகாப்பதுடன், கடல் குப்பைகளைக் குறைத்து கடலோர சமூகங்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தி, ஆரோக்கியமான கடல் சூழலமைப்பையும் மேம்படுத்தியுள்ளன.







# பங்கேற்புள்ள மீன்வள மேலாண்மைக்கு கூட்டு மேலாண்மை குழுக்கள்


நிலைப்புத்தன்மையுள்ள மீன் வள மேலாண்மை, வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் பேரிடர் அபாயங்களைக் குறைத்தல் ஆகிய நோக்கங்களுடன், வளங்களைப் பயன்படுத்தும் சமூகங்களையே அதன் நிர்வாகத்தில் ஈடுபடுத்தும் "பங்கேற்பு மீன்வள மேலாண்மை" முறையை இம்மையம் ஊக்குவிக்கிறது.

இந்த முன்னெடுப்பின் முதல்படியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் கள ஆய்வு நடத்தப்பட்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் கண்டறியப்பட்டன. அந்த ஆய்வின் முடிவுகள், ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற தீர்வுகளை வடிவமைக்க வழிகாட்டின.

**விழிப்புணர்வு மற்றும் பயிற்சி:**

1. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 29 கிராமங்களைச் சேர்ந்த 1,553 மீனவர்களுக்கு கூட்டு மேலாண்மைக் கொள்கைகள் குறித்துப் பயிற்சி அளிக்கப்பட்டு, விழிப்புணர்வு பரவலாக்கப்பட்டிருக்கிறது.
2. சமூகத்தினர் ஒருங்கிணைந்து முடிவெடுப்பதை உறுதி செய்யும் வகையில், 20 கிராமங்களில் பாலின சமத்துவத்துடன் கூடிய கூட்டு மேலாண்மை குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன மற்றும் வலுப்படுத்தப்பட்டுள்ளன.
3. கூட்டு மேலாண்மைக் கருத்தாக்கங்களை முழுமையாகச் செயல்படுத்த, தமிழ்நாட்டின் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள வானகிரி மற்றும் மடத்துக்குப்பம் ஆகிய கிராமங்கள் மாதிரி கிராமங்களாகத் தேர்வு செய்யப்பட்டன.
4. தேர்ந்தெடுக்கப்பட்ட குழு உறுப்பினர்களுக்கு அவர்களின் பங்குகள், பொறுப்புகள் மற்றும் குழுவாகச் செயல்படும் முறை குறித்துத் தீவிரப் பயிற்சி வழங்கப்பட்டது.
5. இதைத் தொடர்ந்து, அக்கிராமங்களில் கூட்டு மேலாண்மைத் திட்டங்களை தயாரிக்கும் பணிகள் தொடங்கப்பட்டன.
6. கூட்டு மேலாண்மை செயல்முறையில் சமூகங்களை ஈடுபடுத்தும் வாழ்வாதார ஆதரவுத் திட்டங்களும் தொடங்கப்பட்டன.
7. மீன்பிடி சமூகங்களுக்கு அதிகாரமளித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்துவதன் மூலம், பங்கேற்பு மீன்வள மேலாண்மையை ஊக்குவிப்பதில் எங்களின் அர்ப்பணிப்பை இந்த ஒருங்கிணைந்த முயற்சிகள் வெளிப்படுத்துகின்றன.





# ஆமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை: சமூகத்தால் முன்னெடுக்கப்படும் ஒரு சிறந்த முயற்சி

வனத்துறையின் ஒத்துழைப்புடன், மீனவ சமூகம், பஞ்சாயத்துத் தலைவர்கள், இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் சுய உதவிக் குழுப் பெண்கள் என அனைவரையும் ஒன்றிணைத்து, ஆமைகளைப் பாதுகாக்கும் பணிகளை இந்த மையம் முன்னெடுத்து வருகிறது.

1. இக்கூட்டு முயற்சியின் விளைவாக, வனத்துறையால் நிறுவப்பட்ட குஞ்சு பொரிப்பகத்தில் 11,003 ஆமை முட்டைகள் சேகரிக்கப்பட்டு அடைகாக்கப்பட்டன.
2. அவற்றில் இருந்து பொரித்த சுமார் 4,173 ஆமைக் குஞ்சுகள், சமூகப் பங்களிப்புடன் பாதுகாப்பாகக் கடலில் விடப்பட்டன.

## தொழில்நுட்பத்தின் மூலம் ஆலிவ் ரிட்லி ஆமைகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பது:

ஒடிசா கடற்கரையில், அழிந்துவரும் ஆலிவ் ரிட்லி ஆமைகளின் முட்டையிடும் பருவத்தில், மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்காமல் ஆமைகளைப் பாதுகாப்பது ஒரு பெரிய சவாலாக இருந்தது. இந்தச் சிக்கலுக்கு, மீனவர் நண்பன் (FFMA) செயலி ஒரு புரட்சிகரமான தீர்வை ஒடிசா மாநில மீன்வளத் துறையுடன் இணைந்து வழங்கியுள்ளது.

## 'மீன்பிடிக்கத் தடைசெய்யப்பட்ட பகுதி' எச்சரிக்கை அமைப்பு:

இந்தச் செயலியின் எச்சரிக்கை அமைப்பு, மீனவர்கள் ஆமைகள் முட்டையிட்டு அடைகாக்கும் தடைசெய்யப்பட்ட பகுதிகளை நெருங்கும்போது எச்சரிக்கை விடுக்கிறது.
இந்த புதிய நடவடிக்கை

1. ஆலிவ் ரிட்லி ஆமைகள் பாதுகாத்துள்ளது.
2. மீனவர்களும் தேவையற்ற அபராதங்களைத் தவிர்த்து தங்கள் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க உதவுகிறது.
3. இந்த எச்சரிக்கை அமைப்பு ஏராளமான மீறல்களைத் தடுத்து, ஆமையின் முக்கிய வாழ்விடங்களை பாதுகாத்தது (ஒன்பது மாதங்களில் 6,811 க்கும் மேற்பட்ட எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன).

## உலகளாவிய பாதிப்பை சமாளிக்க விரிவுபடுத்தக்கூடிய தீர்வுகள்:

பாரம்பரிய மீன்பிடி அறிவுடன் நவீன தொழில்நுட்பத்தை இணைப்பதன் மூலம், உள்ளூர் சவால்களுக்கு ஏற்ற தகவமைப்புத் திறனை நிரூபித்திருக்கும் FFMA, உலகளாவிய பாதிப்புகளுக்கு விரிவுபடுத்தக்கூடிய தீர்வுகளை முன்னுதாரணங்களையும் உருவாக்குகிறது.







# மீனவர் வாழ்வில் மறுமலர்ச்சி: கடல்சார் மற்றும் மீன்வள ஆலோசனை சேவைகளின் பங்கு.

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை (MSSRF) மற்றும் INCOIS இடையே 2005-ம் ஆண்டில் தொடங்கிய கூட்டாண்மையின் கீழ், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அலை பதிவு மிதவைகள் மற்றும் தானியங்கி வானிலை நிலையங்கள், MSSRF-ஆல் நிர்வகிக்கப்படுகின்றன.

இந்த கருவிகள் மூலம் சேகரிக்கப்படும் நிகழ்நேரத் தரவுகள் INCOIS-க்கு அனுப்பப்படுகின்றன. அங்கு அவை பகுப்பாய்வு செய்யப்பட்டு, துல்லியமான முன்னறிவிப்புகளாகவும், முன்கூட்டிய எச்சரிக்கைகளாகவும் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

மீன்பிடிக்க உகந்த மண்டலங்கள் (PFZ) குறித்த தகவல், கடல்சார் நிலை முன்னறிவிப்புகள் (OSF), மற்றும் பேரிடர் எச்சரிக்கைகள், INCOIS வழங்கும் மூன்று முக்கிய சேவைகள் மீனவ சமூகத்திற்கு இன்றியமையாததாக மாறியிருக்கின்றன. இத்தகவல்கள், இந்த மையம் மூலம் பல்வேறு நவீன தொடர்பு சாதனங்கள் வழியாக மீனவர்களைச் சென்றடைகின்றன; இதன் மூலம், சரியான முடிவுகளை எடுத்து, தங்கள் பாதுகாப்பையும் வாழ்வாதாரத்தையும் மீனவர்கள் மேம்படுத்தியிருக்கின்றனர்.

## சென்றடையும் சேவைகளும், அவற்றின் தாக்கமும்

1. INCOIS-ன் சேவைகள், 2 லட்சத்திற்கும் அதிகமான மீனவர்களைச் சென்றடைகின்றன; பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான தகவலறிந்த முடிவுகளை அவர்கள் எடுக்க உதவுகின்றன.
2. அனைத்துப் பயனாளர்களுக்காகவும் உருவாக்கப்பட்டுள்ள தனிப்பட்ட தரவுத்தளம், தகவல்களை இலக்கு நபர்களுக்குத் துல்லியமாகக் கொண்டு சேர்க்கிறது.

## நீண்டகாலத் தாக்கங்கள்

1. நிலையான மீன்பிடி நடைமுறைகள் மற்றும் சமூகத்தின் மீள்திறன் ஊக்குவிக்கப்படுகிறது.
2. கடல்சார் சூழலியல் அமைப்புகள் பாதுகாக்கப்படுவதோடு, மீனவர்களின் சமூக-பொருளாதார நல்வாழ்விற்கும் இது வழிவகுக்கிறது.




















# II

# மீன்பிடிப்புக்குப் பிந்தைய மீன்வள மேலாண்மை மற்றும் வாழ்வாதார மேம்பாடு






## சமூகம் சார்ந்த மீன் பதப்படுத்தும் தொழிலகங்கள்

அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், HACCP தரநிலைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், 5 டன் மீன்களைப் பதப்படுத்தும் திறன் கொண்ட ஒரு நவீன மீன் பதப்படுத்தும் தொழிலகத்தை (FPU) நிறுவியுள்ளது. இந்த FPU-ல், ஆய்வகம், பேக்கேஜிங் மற்றும் சேமிப்பு வசதிகள், மற்றும் குளிரூட்டும் அறை உள்ளிட்ட உள்கட்டமைப்புகள் இடம் பெற்றுள்ளன.

சூரிய மின்சக்தியில் இயங்கும் இரண்டு உலர்த்திகள், மொத்தத்தில் 600 கிலோ உயர்தரக் கருவாடு உற்பத்தியை மேற்கொள்வதற்காக நிறுவப்பட்டுள்ளன.

இந்த முயற்சி 10 கிராமங்களைச் சேர்ந்த 4,731 பெண்களின் வாழ்வில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் மீன் பதப்படுத்தும் மையத்தின் வசதிகளைப் பயன்படுத்தி, உள்ளூர் மீன்வள ஆதாரங்களிலிருந்து உயர்தரக் கருவாடு மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களைத் தயாரித்து, கூட்டாக ₹52,43,776 வருவாயை ஈட்டியுள்ளனர். 200 டன்னுக்கும் அதிகமான மீன், நண்டு, இறால் பதப்படுத்தப்பட்டதன் மூலம் சாத்தியமான இந்த வெற்றி, அவர்களின் குடும்ப வருமானத்தை உயர்த்துவதோடு, சமூகத்தில் பெண்களின் பொருளாதாரப் பங்கையும் வலுப்படுத்தி, இத்திட்டத்தின் செயல்திறனையும் விரிவாக்கத் திறனையும் நிரூபிக்கிறது.

குறைந்த ஈரப்பதம், விரைவான உலர்த்தும் வேகம், மற்றும் மேம்பட்ட ஊட்டச்சத்துத் தரம் ஆகியவற்றை அடைவதன் மூலம், சூரிய கூடார உலர்த்தியை பயன்படுத்தி கருவாடு தயாரிக்கும் முறையே சிறந்தது என்பதை இம்மையம் மேற்கொண்ட விரிவான பகுப்பாய்வு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

வெட்டவெளியில் சூரிய ஒளியில் உலர்த்துவதை விட 30-40% வேகமாக ஈரப்பதம் நீக்கப்படுவதையும், கருவாட்டின் தரம் மற்றும் ஊட்டச்சத்து அளவீடுகள் சிறப்பாக இருப்பதையும், உணவு ஒழுங்குமுறைத் தரங்களுடன் முழுமையான இணக்கநிலை பேணப்படுவதையும், மற்றும் சேமிப்புக் காலம் 12 மாதங்கள் வரை நீட்டிக்கப்படுவதையும் இந்த பகுப்பாய்வு வெளிப்படுத்தியிருக்கிறது.

அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் நோக்கில், நபார்டு வங்கியின் ஒத்துழைப்புடன் கடலூர் மாவட்டத்தில் முடசலோடை மீன்பிடி கிராமத்தில் நிறுவப்பட்ட ஆறு சோலார் உலர்த்திகளின் மூலம், 1,385 கிலோ மீன்களைப் பதப்படுத்தி, அதன் மூலம் ₹48,640 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

சூரிய உலர்த்தி முறைக்கு மாறியதால், இந்தப் பெண்கள் குழுவின் வருமானம், பாரம்பரிய முறைகளை விட இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரித்துள்ளதுடன் தயாரிப்புகளின் தரம், FSSAI பதிவுச் சான்றிதழ் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல, 'அனைவருக்கும் மீன்' மையம் இரண்டு சந்தைப்படுத்தல் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

"முன்பெல்லாம், வெட்டவெளியில்தான் கருவாட்டைக் காய வைப்போம். தரம் குறைவாக இருந்ததால், நெத்திலி கிலோ ₹250-க்குத்தான் போகும். ஆனால், 'அனைவருக்கும் மீன்' மையத்தின் சூரிய உலர்த்தித் திட்டம் வந்த பிறகு, எல்லாம் மாறிவிட்டது. இப்போது கருவாட்டின் தரம் மிகச் சிறந்துள்ளதால், அதே நெத்திலியை கிலோ ₹500 வரை விற்கிறோம். சிறந்த பேக்கேஜிங், சந்தைத் தொடர்புகள் மூலம் எங்கள் வியாபாரம் இன்று கடலூரைத் தாண்டி பிற மாவட்டங்களிலுள்ள பல்பொருள் அங்காடிகள், மேலும் மற்ற மாநிலங்கள் வரை விரிவடைந்துள்ளது. சரக்கு வீணாவது குறைந்து, லாபம் அதிகரித்துள்ளதால், இந்த போட்டி நிறைந்த சந்தையில் எங்களால் தலைநிமிர்ந்து நிற்க முடிகிறது." - சத்யா, முடசலோடை










SOLAR FISH DRYER
சூரிய மீன் உலர்த்திகள்
மீன் கொள்ளளவு
500 கிலோ





## மக்கள் உண்ணும் கருவாடு வகைகளின் ஊட்டச்சத்து விவரக்குறிப்பு

கோடிக்கணக்கான நபர்களுக்கு, குறிப்பாக கடலோர பிராந்தியங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு முக்கியமான உணவு ஆதாரமாக கருவாடு (உலர வைக்கப்பட்ட மீன்) இருக்கிறது. எனவே கருவாட்டின் பாதுகாப்பையும், ஊட்டச்சத்துப் பலன்களையும் மேம்படுத்தி, சிறு மீனவர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்த வேண்டியது மிக அவசியம். இந்த இலக்குகளை அடைய, கருவாடு உற்பத்தியின் பருவகாலம், பயன்படுத்தப்படும் மீன் இனங்கள், அவற்றின் ஊட்டச்சத்து விவரங்கள் போன்றவற்றை ஆழமாக அறிந்துகொள்வது முக்கியம். கருவாட்டின் இந்த முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இம்மையம் ஒரு புதிய ஆய்வைத் தொடங்கியுள்ளது. இதன் கீழ், இப்பகுதியில் பொதுவாகக் கிடைக்கும் கருவாடு வகைகளை விவரக்குறிப்பு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. ஊட்டச்சத்துப் பகுப்பாய்விற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொதுவான கருவாடு வகைகள் பின்வருமாறு:

1. சாளை மீன்
2. காரல் மீன்
3. கத்தாளை
4. காரல் வகை
5. மத்தி சாளை
6. காணாங்கெளுத்தி
7. நெத்திலி
8. வாளை மீன்
9. நெத்திலி
10. பாறை மீன்

சமச்சீர் உணவின் ஒரு பகுதியாகக் கருவாட்டை உட்கொள்வதன் மூலம், குறிப்பாகக் கடலோரப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினரின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த முடியும். ஏனெனில், பொதுவாக உண்ணப்படும் கருவாடு வகைகள், அத்தியாவசிய புரதம், நுண்ணூட்டச்சத்துக்கள் மற்றும் ஆற்றல் நிறைந்த ஓர் உணவு ஆதாரம் என்பதை ஆய்வுகள் உறுதி செய்துள்ளன.



நெத்திலி



கத்தாளை



காரல்



மத்தி சாளை



வாளை மீன்



பாறை

# சிறிய கடல் மீன்களிலிருந்து தயாரிக்கப்படும் மதிப்பு கூட்டப்பட்ட மீன் பொருட்களின் தரமாக்கல்

அவசர விற்பனை மற்றும் மீன்பிடிப்பிற்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கும் நோக்கில், 'அனைவருக்கும் மீன்' ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், நெத்திலி, காரல் மற்றும் இறால் போன்ற சிறிய கடற்பரப்பு மீன்களிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட புதிய பொருட்களை உருவாக்கும் தயாரிப்பு மேம்பாட்டு ஆய்வுகளை நடத்தி வருகிறது.

குறிப்பாக, நெத்திலியிலிருந்து தயாரிக்கப்படும் பொடி, மசாலா கலவை, சூப் குச்சிகள், சம்பல் போன்றவை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். கடந்த 15 ஆண்டுகளில், மீன், இறால், நண்டு மற்றும் கடற்பாசி ஆகியவற்றைக் கொண்டு, இது போன்ற 59 வகையான தயாரிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தத் தயாரிப்புகள், நுகர்வோரைச் சென்றடைவதற்கு முன்பு, வாசனை, தரம் மற்றும் பொட்டல நிலைத்தன்மைக்காக பல ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு, இப்பொருட்களின் நீண்ட சேமிப்புக் காலத்தையும், அவை பெரிய அளவில் உற்பத்தி செய்வதற்கு ஏற்றவை என்பதையும் உறுதி செய்கின்றன.




இவ்வாறு தரம் உறுதி செய்யப்பட்ட பொருட்களை அன்றாட உணவில் சேர்ப்பது, உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை வலுப்படுத்துவதோடு, சிறு மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துகிறது.

பூம்புகார் மற்றும் வானகிரி போன்ற பகுதிகளைச் சேர்ந்த மீனவப் பெண்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் மூலம் புதிய திறன்களைப் பெற்றுள்ளனர். மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களைத் தயாரித்து வருமானம் ஈட்டும் ஆற்றலை அவர்கள் பெற்றுள்ளதால், இந்த முயற்சி ஒட்டுமொத்த கடலோர சமூகங்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் பங்களிக்கிறது.

இந்த ஆய்வு, தொழில்துறை நடைமுறைகள், அரசாங்கக் கொள்கைகள், மற்றும் நுகர்வோர் ஆரோக்கியத்தில் குறிப்பிடத்தக்க நடைமுறைத் தாக்கங்களை ஏற்படுத்துகிறது. இதன் அடிப்படையில், மீன்பிடிப்பிற்கு பிந்தைய நடைமுறைகளை மேம்படுத்துதல், மீன்பிடித் துறையின் நிலைத்தன்மை மற்றும் மீள்திறனை வலுப்படுத்த மதிப்பு கூட்டுதல், மற்றும் சிறு மீனவர்கள் மற்றும் கடலோர சமூகங்களுக்கான ஆதரவை அதிகரித்தல் போன்ற முக்கியப் பரிந்துரைகளை இந்த ஆய்வு முன்வைத்திருக்கிறது.









## மீன் தரம் மற்றும் பாதுகாப்பு குறித்த FAO நடத்தை விதிமுறைகள் பற்றிய அறிவூட்டல்

மீன்பிடித்தல், கையாளுதல், சேமிப்பு, பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் என மீன்வளத் துறையின் அனைத்துப் படிநிலைகளிலும் ஈடுபட்டுள்ள மீனவர்கள், பெண்கள், பதப்படுத்தும் தொழிலாளர்கள், ஏலதாரர்கள் மற்றும் வர்த்தகர்களை இலக்காகக் கொண்டு ஒரு விரிவான அறிவூட்டல் கல்வி திட்டம் தொடங்கப்பட்டது. 'அனைவருக்கும் மீன்' மையம், NETFISH, MPEDA மற்றும் மீனவர் சங்கங்களுடன் இணைந்து, மீன் மற்றும் மீன்வளப் பொருட்கள் குறித்த FAO நடத்தை விதிமுறைகள் பற்றிய இந்த முக்கியமான திட்டத்தைச் செயல்படுத்தியது.

மீன் பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கம். இந்த இலக்கை அடைய, மீன் தர மேலாண்மையில் உள்ள சிறந்த நடைமுறைகள் குறித்து அனைத்துப் பங்குதாரர்களுக்கும் கற்பிக்கப்படுகிறது.

மொத்தம் 112 கிராமங்களைச் சேர்ந்த 7,097 பெண்களும் 5,768 ஆண்களும் இந்தப் பயிற்சித் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். அவர்களுக்காக, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், ராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மீன் பதப்படுத்தும் தொழிலகங்கள், மீன்பிடிப் படகுகள் வந்துசேரும் இடங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகங்களில் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இத்திட்டம் மீன்களை கையாளுதல் மற்றும் பதப்படுத்துதலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுக்கு வழிவகுத்திருக்கிறது. மீன்களைக் கையாளும் பாதுகாப்பற்ற மூங்கில் கூடைகளுக்குப் பதிலாக, நவீன மற்றும் பாதுகாப்பான மாற்று வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1:1 என்ற சரியான விகிதத்தில் ஐஸ் பயன்படுத்தும் முறையை மீனவர்கள் பின்பற்றத் தொடங்கியதால், மீன்களின் தரம் சிறப்பாகப் பேணப்பட்டது. கடல் மீனவர்களிடையே படகில் சுகாதாரம் மற்றும் தனிப்பட்ட சுகாதாரப் பழக்கவழக்கங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது.

இத்திட்டம் வழங்கிய தொடர்ச்சியான அறிவூட்டல் மற்றும் பயிற்சியின் விளைவாக, ஆண், பெண் மீனவர்கள் பாதுகாப்பான நிலையான மீன்பிடித்தல் மற்றும் பதப்படுத்தும் முறைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளனர். இந்த மாற்றம், மீன் பொருட்களின் தரம் மற்றும் பாதுகாப்பை கணிசமாக மேம்படுத்தியுள்ளது. இதன் இறுதிப் பலன்கள், நுகர்வோரைச் சென்றடைவதோடு, ஒட்டுமொத்த மீன்வளத் துறையையும் அதிக பொறுப்புமிக்கதாக மாற்றுகிறது.



# டிஜிட்டல் செயல்பாடுகளில் கல்வியறிவு மற்றும் மீன் பிடிப்பிற்கு பிந்தைய புதுமையான உத்திகள் மூலம் மீனவப் பெண்களுக்கு அதிகாரமளித்தல்

"இன்று என் தொழில் உள்ளூர் சந்தையைக் கடந்து, நாடு தழுவிய அளவில் விரிவடைந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் MSSRF அளித்த டிஜிட்டல் அறிவூட்டல்தான். ஆரம்பத்தில், ஒரு சாதாரண பட்டன் போன் மட்டுமே வைத்துக்கொண்டு, தொழில்நுட்பம் பற்றி ஒன்றும் தெரியாமல் இருந்தேன். ஆனால், அவர்களின் பயிற்சிக்குப் பிறகு ஜி பே, வாட்ஸ்அப் போன்ற கருவிகளைப் பயன்படுத்தக் கற்றுக்கொண்டேன். இந்த டிஜிட்டல் கல்வி என் வாழ்க்கையையே மாற்றிவிட்டது." என்கிறார் முடசலோடையைச் சேர்ந்த மீன் விற்பனையாளர் அனுஷியா.

இந்தியா முழுவதிலும் இருந்து பெறப்பட்ட 260 விண்ணப்பங்களுக்கு இடையே நடைபெற்ற கடும் போட்டியில் பெண்களின் சவால்களை சமாளிக்கும் திட்டங்களில் (WomenConnet Challenge) தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு சமூகத் துறை நிறுவனங்களில் 'அனைவருக்கும் மீன்' மையமும் ஒன்றாகும்.

'விமன் கனெக்ட் சேலஞ்ச்' (WCC) திட்டம், டிஜிட்டல் கருவிகள் மற்றும் மீன் பிடிப்பிற்குப் பிந்தைய அறிவூட்டல் மூலம் மீனவப் பெண்களுக்கு வெற்றிகரமாக அதிகாரமளித்துள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்: தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவப் பெண்களின் சமூக-பொருளாதார மீள்திறனை உயர்த்துதல், பாலின டிஜிட்டல் இடைவெளியைக் குறைத்தல். மீன்பிடிப்பிற்குப் பிந்தைய மீன்வளத்தில் ICT புத்தாக்கங்களைப் பயன்படுத்துதல்.

மீனவப் பெண்களின் டிஜிட்டல் அணுகல் குறித்து, ஒரு முதற்கட்ட ஆய்வு குறிப்பிடத்தக்க நுண்ணறிவுகளை வெளிப்படுத்தியுள்ளது. இந்த ஆய்வு, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 38 மீன்பிடிக் கிராமங்களில், 18 முதல் 50 வயதுக்குட்பட்ட 550 பெண்களிடையே, அவர்களின் மொபைல் மற்றும் இணையப் பயன்பாடு குறித்து நடத்தப்பட்டது. இந்த ஆய்வின் முடிவுகள், மீனவப் பெண்களைத் திறந்த சந்தைகளுடன் இணைக்கும் பொருட்டு, அவர்களிடையே உள்ள டிஜிட்டல் இடைவெளியைக் குறைப்பதற்கும், டிஜிட்டல் கல்வி அறிவை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பான இணையப் பயன்பாட்டு முறைகளை உறுதி செய்வதற்கும் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.



## முக்கியக் கண்டறிதல்கள்

ஆய்வில் பங்கேற்றவர்களில் 82% பேருக்கு, தங்களுக்குச் சொந்தமாகவோ அல்லது குடும்பத்தில் பொதுவாகவோ ஒரு சாதாரண போன் அல்லது ஸ்மார்ட்போனைப் பயன்படுத்தும் வசதி இருந்தது.

1. 55% நபர்கள் சாதாரண போன்களையும், 27% நபர்கள் ஸ்மார்ட்போன்களையும் பயன்படுத்துகின்றனர்.
2. வெறும் 29% பேருக்கு மட்டுமே சொந்த அல்லது குடும்ப சாதனங்கள் மூலம் இணையத்தைப் பயன்படுத்தும் வசதி இருந்தது. 73.28% பெண்களுக்கு இணையப் பயன்பாட்டில் உள்ள அபாயங்கள் குறித்து எந்தவித விழிப்புணர்வும் இல்லை என்பது கவலைக்குரியது.

இந்த டிஜிட்டல் மற்றும் பாதுகாப்பு இடைவெளிகளைக் குறைப்பதற்காகவே, WCC திட்டம் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் ஆறு கடலோர மாவட்டங்களில் பல்வேறு ICT தளங்களைப் பயன்படுத்தி செயல்படுத்தப்பட்டிருக்கிறது

## டிஜிட்டல் கருவிகள்

மீன் பிடிப்பிற்குப் பிந்தைய மீன்வள செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள 50 சுய உதவிக் குழுக்களுக்கு டேப்லெட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. டிஜிட்டல் இடைவெளியைக் குறைத்து, நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதே இதன் நோக்கம்

## டிஜிட்டல் அறிவூட்டல்

மொத்தம் 6,000 பெண்கள், 211 டிஜிட்டல் அறிவூட்டல் அமர்வுகளில் பங்கேற்று, டிஜிட்டல் / இணைய வழி சந்தையாக்கல் நிதி மற்றும் மீன்பிடிப்பிற்கு பிந்தைய நடைமுறைகள் தொடர்பான அத்தியாவசியத் திறன்களைக் கற்றுக்கொண்டனர்.





## ஒரு கைபேசி செயலி

"FisherwomenConnect" என்ற பெயரில் ஒரு பிரத்யேக கைபேசி செயலி கூகுள் பிளே ஸ்டோரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் செயலி, மீன்பிடிப்பிற்குப் பிந்தைய மீன்வள செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள பெண்களின் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

தகவல் இடைவெளியைக் குறைப்பது, ஆதரவான சமூகத்தை உருவாக்குவது, இத்துறையில் உள்ள பெண்களுக்கான உள்ளடக்கம் மற்றும் அதிகாரமளித்தலை ஊக்குவிப்பது ஆகியவற்றை இந்த புதுமையான செயலி செய்கிறது. எனவே, FisherwomenConnect என்பது வெறும் ஒரு செயலி என்பதைத் தாண்டி, அதிகாரமளித்தலுக்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாக விளங்குகிறது.

### முக்கிய அம்சங்கள்:

1. இதில், தூய்மையான முறையில் மீன் பதப்படுத்துதல், மதிப்பு கூட்டுதல், மீன் பாதுகாப்பு மற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்து விரிவாகக் கற்றுக்கொள்ளும் வகையில் கற்றல் அலகுகள் உள்ளன.
2. இந்தச் செயலி, தகவலறிந்து முடிவெடுப்பதற்காக, நிகழ்நேர வானிலை அறிவிப்புகள், பேரிடர் எச்சரிக்கைகள், மற்றும் சந்தை நிலவரத் தகவல்களை வழங்குகிறது.
3. செய்திகள், அரசாங்கத் திட்டங்கள், மற்றும் மீன்வளத் துறை முன்முயற்சிகள் தொடர்பான அறிவிப்புகள் அவ்வப்போது வழங்கப்படுகின்றன.
4. பிரத்யேகமான ஆன்லைன் அங்காடி, மீனவப் பெண்களை வாங்குபவர்களுடன் நேரடியாக இணைப்பதால், நியாயமான விலையும், சிறந்த பொருளாதார வாய்ப்புகளும் உறுதி செய்யப்படுகின்றன.
5. மீன்பிடிப்பிற்கு பிந்தைய மீன்வள நடவடிக்கைகளில் ஏற்படும் தொழில் சார்ந்த சுகாதார அபாயங்களை எப்படிக் குறைப்பது மற்றும் கையாள்வது குறித்த தகவல்

## மீனவப் பெண்களுக்கான பிரத்யேக உதவி எண்

மீனவப் பெண்களுக்காகவே பிரத்யேகமாக 'மீனவப் பெண்கள் உதவி எண் ' நிறுவப்பட்டுள்ளது. மீன்பிடிப்பிற்கு பிந்தைய மீன்வளம் குறித்த அத்தியாவசிய ஆதரவையும் வழிகாட்டுதலையும் வழங்குவதன் மூலம், இந்த மையம் பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாகச் செயல்படுகிறது. இது, மீனவப் பெண்கள் பின்வரும் தலைப்புகளில் உதவி மற்றும் வழிகாட்டுதலைப் பெற, பாதுகாப்பான மற்றும் ஆதரவான ஓர் இடத்தை வழங்குகிறது:

1. வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் வகையில், மீன் கையாளுதல், பதப்படுத்துதல், மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பான நிபுணர்களின் ஆலோசனைகள்.
2. பொருளாதார அதிகாரமளித்தலை ஊக்குவிக்கும் வகையில், நிதி அறிவூட்டல் மற்றும் திறன் மேம்பாடு குறித்த வழிகாட்டுதல்கள்.
3. தொழில் சார்ந்த சுகாதாரப் பாதுகாப்பு குறிப்புகளையும், ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வு தொடர்பான தகவல் அணுகுவசதி.
4. மீனவப் பெண்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு, கல்வி வாய்ப்புகள், உதவித்தொகை, மற்றும் தொழிற்பயிற்சி தொடர்பான ஆதரவு.

மீன்வளத் துறையில் பெண்கள் அதிகாரம் பெறுதல், டிஜிட்டல் உள்ளடக்கம், மற்றும் நிலையான வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதே மையத்தின் தலையாய நோக்கம். இந்த அர்ப்பணிப்பின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டான இத்திட்டம், டிஜிட்டல் இடைவெளியைக் குறைத்து, மீனவப் பெண்களுக்குத் தேவையான அறிவு, கருவிகள் மற்றும் சந்தை அணுகலை வழங்கி, அவர்களின் சமூக-பொருளாதார மீள்திறனை வலுப்படுத்தியுள்ளது. இதன் மூலம், இப்பகுதியில் உள்ள பெண்கள் அதிகப் பொருளாதார சுதந்திரத்தையும், திறன் மேம்பாட்டையும் அடைந்துள்ளனர். இத்தகைய புத்தாக்க முயற்சிகளை இம்மையம் தொடர்ந்து மேற்கொள்ளும்.



# சூரிய மின்சக்தியில் இயங்கும் எளிதாக எடுத்துச் செல்லக்கூடிய சிறிய மீன் உலர்த்தி சாதனம்

சந்தையில் கிடைக்கும் வழக்கமான சூரிய உலர்த்தி சாதனங்கள், பல நன்மைகளைக் கொண்டிருந்தாலும், சிறு பயனாளர்களுக்கு, குறிப்பாக மீனவப் பெண்களுக்குப் பயன்படுவதில்லை. ஏனெனில் அவை பெரியதாகவும், விலை உயர்ந்ததாகவும், நிர்வகிக்கக் கடினமானதாகவும் இருக்கின்றன. மேலும், அவற்றை நிறுவ அதிக இடமும், பழுதுபார்க்க வெளி உதவியும் தேவைப்படுகிறது. இந்த நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் வகையில்தான், MSSRF-ன் 'அனைவருக்கும் மீன்' மையம் ஒரு சூரிய மின்சக்தியில் இயங்கும் எளிதாக எடுத்துச் செல்லக்கூடிய சிறிய மீன் உலர்த்தி சாதனத்தை உருவாக்கியுள்ளது. உள்ளூர் தேவைகளுக்கென்றே பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட இந்த சிறிய, குறைந்த செலவிலான உலர்த்தி, பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. இது சூரிய சக்தி மற்றும் மின்சாரம் ஆகிய இரண்டிலும் இயங்கும் ஒரு கலப்பின மாதிரி என்பதால், மேகமூட்டமான நாட்களிலோ அல்லது இரவிலோ தடையின்றிச் செயல்படும். வீட்டுப் பின்புறங்களிலேயே எளிதாக நிறுவக்கூடிய இதன் வடிவமைப்பு, பெண்களால் எளிதில் கையாளக்கூடியதாகவும், வெளி நிறுவனங்களைச் சார்ந்திருக்கும் தேவையைக் குறைப்பதாகவும் உள்ளது.

கடந்த ஓராண்டாக, இந்த உலர்த்தி மாதிரி விரிவான கள சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, அதன் உண்மையான செயல்திறன் மதிப்பிடப்பட்டது. இந்தச் சோதனைகளின் மிக முக்கிய விளைவு, மீனவப் பெண்களிடமிருந்து பெறப்பட்ட மதிப்புமிக்க கருத்துக்கள்தான். அவை, உலர்த்தியின் வடிவமைப்பில் மேலும் மேம்படுத்த வேண்டிய பகுதிகளைத் தெளிவாகக் காட்டின. அந்தக் கருத்துக்களின் அடிப்படையில், தற்போது வடிவமைப்பை வலுப்படுத்தி, மேம்படுத்தப்பட்ட புதிய தயாரிப்பை இந்த ஆண்டு (2025) அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் புதிய தயாரிப்பு, பெண்களின் தேவைகளுக்கு ஏற்றதாகவும், அதிக செயல்திறன் மற்றும் நீடித்த உழைப்பைக் கொண்டதாகவும் இருக்கும். 'அனைவருக்கும் மீன்' மையத்தின் 15-வது ஆண்டு விழாவில் வெளியிடப்பட்ட இந்த உலர்த்தி சாதனம், நவீன தொழில்நுட்பம் மூலம் பெண்களுக்கு அதிகாரமளிக்கும் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல் என்பது இதன் மூலம் உறுதியாகிறது.



சராசரியாக 53°C வெப்பநிலையில் இயங்கும் இந்த உலர்த்தி, 20 கிலோ வரை மீன்களை உலர்த்தும் திறன் கொண்டது. சீரான வெப்பப் பரவல் மூலம், உலர்த்தும் நேரத்தைக் கணிசமாகக் குறைக்கிறது. தொழில்நுட்பத்தையும், உள்ளூர் நிபுணத்துவத்தையும் இணைத்து, மீனவப் பெண்கள் மற்றும் அவர்களது சமூகங்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் ஒரு நடைமுறைக்கு உகந்த மற்றும் நிலையான தீர்வாக இந்த சிறிய சோலார் மீன் உலர்த்தி விளங்குகிறது.









## சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் அறுவடைக்குப் பிந்தைய முயற்சிகளை அதிகரிப்பதற்காக சமூகக் குழுக்களுக்கு ஆதரவளிப்பது

வெற்றிப் பாவை மீனவப் பெண்கள் உற்பத்தியாளர் கம்பெனி (VPFWPCL), அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் நிறுவனத்தால் 160 பங்குதாரர்களைக் கொண்டு, ரூ. 1,60,000 ஆரம்பப் பங்கு முதலீட்டுடன் தொடங்கப்பட்ட இந்நிறுவனம், அறுவடைக்குப் பிந்தைய மீன்வளத் துறையில் பெண்களின் கூட்டு முயற்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. சூரிய உலர்த்திகளைப் பயன்படுத்திச் சுகாதாரமான கருவாடு தயாரிப்பதுடன், பல மதிப்புக்கூட்டப்பட்ட மற்றும் உடனடியாக உண்ணக்கூடிய மீன் தயாரிப்புகளையும் இந்நிறுவனம் "சமுத்ரா" என்ற பெயரில் விற்பனை செய்துவருகிறது. ஆண்டுக்கு 500.9 கிலோ கருவாடு உற்பத்தி செய்து, மொத்தமாக ரூ. 1,69,000 என்ற தொகைக்கு விற்பனை செய்துள்ளது. தரம், சுகாதாரம் மற்றும் நிலைத்தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கும் இத்தயாரிப்புகள், உள்ளூர் சந்தைகள், கண்காட்சிகள் மற்றும் அரசின் ஆதரவு திட்டங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. புதுச்சேரி தரங் கண்காட்சியில், VPFWPCL-இன் தனித்துவமான விற்பனையகம் உயர்தரத் தயாரிப்புகளுக்காக, முதல் பரிசையும் வென்றது. இந்த வெற்றியின் காரணமாக, புது டெல்லியில் நடைபெற்ற உலக உணவு இந்தியா 2024 நிகழ்வில் பங்கேற்க VPFWPCL தேர்ந்தெடுக்கப்பட்டது.

தனது வணிகத்தை விரிவுபடுத்த, இந்த நிறுவனம் பல புதுமையான உத்திகளைக் கையாண்டுள்ளது. வணிக நடவடிக்கைகளை முறைப்படுத்த ஜி.எஸ்.டி. பதிவு, மற்றும் உணவுப் பாதுகாப்புத் தரங்களை உறுதிப்படுத்த FSSAI சான்றிதழ் போன்றவற்றை இந்நிறுவனம் பெற்றுள்ளது. இந்த முயற்சி, கூட்டுத் தொழில்முனைவின் வலிமையையும், அது மீனவப் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதோடு, மீன்வளத் துறையில் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு எவ்வாறு ஒரு புதிய வழியை அமைக்கிறது என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

MSSRF ஆதரவுடன், நாங்கள் கருவாட்டை சூரிய உலர்த்தல் மற்றும் மதிப்புக்கூட்டல் மூலம் தரமான தயாரிப்பாக மாற்றியுள்ளோம். மேலும், FSSAI. சான்றிதழ் மற்றும் ஜி.எஸ்.டி. இணக்க நிலையைக் கொண்டிருக்கும் எங்களின் தரமான தயாரிப்புகள் விமானம் வழியாகத் தொலைதூர சந்தைகளுக்கும் அனுப்பப்படுகின்றன. பெண்களால் வழிநடத்தப்படுகின்ற முதல் FFPO - ன் தலைவராக இருக்கும் நான், தற்போது மற்ற பெண்களுக்கும் பயிற்சி அளித்து, மீன்வளத் துறையில் அவர்கள் அதிகாரம் பெற பயிற்சியளிக்கிறேன்'' என்று வனகிரியைச் சேர்ந்த ஷர்மிளா கூறினார்.





MSSRF
SEED Division, DST, Govt. of India
3 – Day Training Programme on
Jointly Organized by




MSSRF
Consultative Workshop on Commemorating









# III

# மீன்வளர்ப்பு பண்ணைகள் மற்றும் வள மேம்பாடு





## ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு முறைகளை (IFFS) ஊக்குவித்தல்

சுனாமிக்குப் பிந்தைய காலகட்டத்தில், பாதிக்கப்பட்ட மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மீன் விவசாயிகளின் மறுவாழ்வுக்காக, அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி நிறுவனம் விவசாயிகளை மையப்படுத்திய ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு அமைப்பை உருவாக்கியுள்ளது. இது பண்ணைக்கு வெளியே இருந்து வாங்கப்படும் பொருட்களைக் குறைத்து, பண்ணையில் கிடைக்கும் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தும் ஒரு குறைந்த முதலீட்டு மீன் வளர்ப்பு முறையாகும்.

இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறையில், மீன் குளங்களைச் சுற்றி கோழி வளர்ப்பு, காய்கறி பயிரிடல், அசோலா, மண்புழு உரம், தேனீ வளர்ப்பு, பால் பண்ணை, ஆடு வளர்ப்பு, பழமரங்கள் மற்றும் தீவனப் பயிர்கள் போன்ற பல்வேறு கூறுகள் இணைக்கப்பட்டுள்ளன. இதன் முக்கிய நோக்கம், ஒருங்கிணைந்த பண்ணை முறைகளை ஊக்கப்படுத்துவதும், பண்ணையில் இருக்கும் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதும் ஆகும். இதன்மூலம், விவசாயிகளுக்கு வெவ்வேறு துணை வழிமுறைகள் வழியாக ஆண்டு முழுவதும் வருமானம் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

64 கிராமங்களில் உள்ள 250 விவசாயிகளிடம் 15 ஆண்டுகள் நடத்தப்பட்ட ஆய்வு, ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு அமைப்பின் (IFFS) சிறப்பான உற்பத்தித் திறனையும், அதன் ஆதாயங்களையும் வெளிப்படுத்தியுள்ளது.

மீன், கோழி வளர்ப்பு, தீவனப் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் அசோலா ஆகியவற்றை ஒருங்கிணைத்த இம்முறையில், ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1,10,369 என்ற அதிகபட்ச வருமானம் கிடைத்துள்ளது. பாரம்பரிய விவசாய முறைகளுடன் ஒப்பிடுகையில், ஒருங்கிணைத்த முறையின் தினசரி உற்பத்தித் திறன் மிகவும் அதிகமாக இருந்தது. பாரம்பரிய முறையில் ஒரு ஹெக்டேருக்கு 18.2 கிலோவாக இருந்த உற்பத்தி, ஒருங்கிணைத்த முறையில் 42.6 கிலோவாக உயர்ந்ததுள்ளது.

ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு அமைப்பின் மாதிரியில், ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1,10,369 மொத்த வருமானமும், ரூ. 77,658 நிகர வருமானமும் கிடைத்தது. இந்த முறையில் ஒரு விவசாயி, 10 மாதங்களில் ஒரு ஹெக்டேருக்கு 2,375 கிலோகிராம் மீன் உற்பத்தி செய்து குறிப்பிடத்தக்க சாதனையைப் படைத்திருக்கிறார்.

இந்த மையம், தரமான கெண்டை மீன் குஞ்சுகள், பயிற்சி, திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள், தொழில்நுட்ப உதவிகள் மற்றும் கடலோர மீன் வளர்ப்பு ஆணையத்தின் அனுமதிகளைப் பெறுவதற்கான வழிகாட்டுதல்கள் எனப் பல வழிகளில் மீன் விவசாயிகளுக்கு ஆதரவு அளித்துள்ளது.

IFFS முறையை ஊக்குவிப்பதன் மூலம், இயற்கை வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்த முடியும் என்றும், அது நிலைத்தன்மை வாய்ந்த விவசாய முறைகளுக்கு வழிவகுக்கும் என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் புயல் அதிகமாக தாக்கும் மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் போன்ற பகுதிகளில், பல்வகைப்படுத்துவதன் மூலம் இந்த முறை விவசாயிகளின் இடர்களை குறைக்கிறது. அதேசமயம், ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் அதிக உற்பத்தியை உறுதிசெய்து, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தி, உற்பத்திச் செலவைக் குறைக்கிறது. வளங்களை மறுசுழற்சி முறையில் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பை வழங்கி, அவர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துகிறது.

# ஒருங்கிணைந்த சதுப்புநில மீன் வளர்ப்பு முறை

இந்தியாவின் கடலோரப் பகுதிகளுக்குக் கடல் மட்டம் உயர்ந்து வருவது ஒரு பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. இதனால் 5,700 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பும், கிட்டத்தட்ட 70 லட்சம் குடும்பங்களும் வெள்ள அபாயத்திற்கு ஆளாகும் நிலை உருவாகக்கூடும். வறுமை, போதிய சமூக சேவைகள் இல்லாதது மற்றும் சூழலமைப்புகளின் சீரழிவு போன்ற காரணங்களால் இந்தச் சமூகங்கள் மேலும் பலவீனமடைகின்றன.

கடல் மட்ட உயர்வு ஒரு சவாலாக இருந்தாலும், அது மீன் வளர்ப்பு மூலம் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஒரு வாய்ப்பையும் உருவாக்குகிறது. காலநிலை மாற்றத்துக்கான பன்னாட்டு அரசுகளுக்கிடையேயான குழுவின் கடலோர மண்டல மேலாண்மை துணைக்குழுவின் கணிப்பின்படி, உவர்ப்புத்தன்மையால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை மீன் வளர்ப்புப் பண்ணைகளாக மாற்றுவது உட்பட, நிலப் பயன்பாட்டு முறைகளில் மாற்றங்களுக்கு மக்கள் தங்களை தயார்படுத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உவர்ப்பு நிலங்களில் ஏற்படும் சவால்களுக்கு ஒரு நிலையான தீர்வை ஒருங்கிணைந்த சதுப்புநில மீன் வளர்ப்பு முறை வழங்குகிறது. இந்த அணுகுமுறையை MSSRF உருவாக்கி முன்னோடியாக செயல்படுத்தி, மற்றவர்களுக்கு வழிகாட்டுகிறது. இந்த முறை சதுப்புநில காடுகள் வளர்ப்பினையும் மீன் வளர்ப்பையும் ஒருங்கிணைக்கிறது. கடல் நீரை இந்த வளர்ப்புக்குப் பயன்படுத்துவதால், மீன்களுக்குத் தேவையான ஆக்ஸிஜன் மற்றும் உணவு (தாவர நுண்ணுயிரிகள்) இயற்கையாகவே கிடைக்கின்றன. இதனால், செயற்கை உணவு மற்றும் மின்சாரம் தேவைப்படுவதில்லை. இதன் விளைவாக, உற்பத்திச் செலவு குறைவதுடன், சுற்றுச்சூழல் மாசுபாடும் தடுக்கப்படுகிறது.

நபார்டு (NABARD) நிறுவனத்துடன் இணைந்து, அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் கடலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ், மூன்று குளங்களில் 5,308 சதுப்புநில மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இந்த மரக்கன்றுகள், புயல் மற்றும் மண் அரிப்பிலிருந்து பாதுகாக்கும் இயற்கை கவசமாக செயல்படுவதுடன், நீர்வாழ் உயிரினங்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களையும் வழங்குகின்றன.

இத்திட்டம் குறிப்பிடத்தக்க பொருளாதார நன்மைகளைத் தந்துள்ளது. இதன் மூலம், மொத்தம் 457 கிலோ மீன்கள் மற்றும் நண்டுகள் அறுவடை செய்யப்பட்டு, ரூ. 3,87,705 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இது நேரடியாக 35 மீனவர்களுக்கு வருவாய் ஈட்ட உதவியிருப்பதோடு, காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் அவர்களின் திறனையும் அதிகரித்துள்ளது. மேலும், நிலையான மீன் வளர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் இத்திட்டம் ஊக்குவித்துள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், ஒருங்கிணைந்த சதுப்புநில மீன் வளர்ப்பு முறை, நிலையான மீன் வளர்ப்பு, சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு மற்றும் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் சிறந்த அணுகுமுறையாகத் திகழ்கிறது.

"இத்திட்டத்திற்கு முன்புவரை, எனக்கு தன்னம்பிக்கை இல்லை; நிதித் தேவைகளுக்கு மற்றவர்களைச் சார்ந்திருந்தேன். ஆனால், மீன் வளர்ப்பில் பயிற்சியும் குழுச் செயல்பாடுகளும் என்னை எங்களது சுயஉதவிக் குழுவின் தலைமை பொறுப்புக்கு உயர்த்தியிருக்கின்றன. இப்போது நான் பொருளாதார ரீதியாகச் சுதந்திரமான நபராக இருக்கிறேன். என் குழுவினருடன் சேர்ந்து 1,050 சதுப்புநிலக் கன்றுகளை நாங்கள் வளர்த்திருக்கிறோம். இது எங்களுக்குத் தன்னம்பிக்கையையும், தலைமைப் பண்பையும், மற்றும் நிலைத்தன்மை மீது பொறுப்புறுதியையும் தந்திருக்கிறது" என்கிறார் உத்ரா என்ற பெண்மணி.










# மீன் வளர்ப்பை அடிப்படையாகக் கொண்டு வாழ்வாதாரத்திற்கு உதவும் திட்டங்கள்

### 1. எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய மீன் குஞ்சு பொரிப்பகம்

2021-ஆம் ஆண்டு, ஐ.சி.ஏ.ஆர்.- தேசிய மீன் மரபணு வளர்ப்பு நிறுவனத்தின் (ICAR-NBFGR) நிதியுதவியுடன், மீன்வள ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய மீன் குஞ்சு பொரிப்பகம் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில், இயற்கையான நீர்நிலைகளிலிருந்து முதிர்ச்சியடைந்த ஆண் மற்றும் பெண் மீன்களைப் பெறுவதில் சிரமங்களும், பூஞ்சை மற்றும் பாக்டீரியா தொற்றுகளும் சவாலாக இருந்தன. அடுத்த சுழற்சியில், இந்தக் குறைபாடுகள் சரி செய்யப்பட்டன. இயற்கை நீர்நிலைகளிலிருந்து ஆரோக்கியமான, முதிர்ந்த மீன்களைச் சேகரித்து, அனைவருக்கும் மீன் பண்ணைக் குளங்களில் அவைகள் வைக்கப்பட்டன; அந்த மீன்களுக்கு 28% புரதம் கொண்ட தீவனங்கள் வழங்கப்பட்டதோடு மேலும், இனப்பெருக்கத்தின்போது தொடர்ந்து நீர் விநியோகம் கிடைப்பதை உறுதிசெய்ய, நீர் சுழற்சி அமைப்பும் மாற்றியமைக்கப்பட்டது.

எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய கெண்டை மீன் குஞ்சு பொரிப்பகத்தில், சாதாரண கெண்டை மீனின் இனப்பெருக்கச் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதன் மூலம், அதிக எண்ணிக்கையில் ஆரோக்கியமான குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தற்போது குஞ்சு வளர்ப்புத் தொட்டிகளில் பராமரிக்கப்பட்டு வரும் இக்குஞ்சுகள் விரைவில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன் மூலம், வரும் காலங்களில் கெண்டை மீன் வளர்ப்பை வெற்றிகரமாக மேற்கொள்ள ஒரு புதிய வழிமுறை உருவாகியுள்ளது.

### 2. குடும்ப பண்ணையம் மூலம் நண்டு வளர்ப்பு

அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் நிலைத்தன்மையுள்ள நண்டு வளர்ப்பு முறைகளை, குறிப்பாக பிச்சாவரம் சதுப்புநிலக் காடுகளைச் சுற்றியுள்ள பழங்குடி மீனவர்களிடையே, ஊக்குவிப்பதில், முக்கியப் பங்காற்றியிருக்கிறது.

லக்னோவில் உள்ள தேசிய மீன் மரபணு ஆராய்ச்சி பணியகத்துடன் இணைந்து, கடலூர் மாவட்டத்தில் உள்ள முடசல் ஓடை மற்றும் கலைஞர் கிராமங்களில் குடும்பப் பண்ணையமாக நண்டு வளர்ப்பு அமைவிட வசதிகளை நிறுவியுள்ளது.
இந்த மையம், நண்டு வளர்ப்பு முறைகள், நீரின் தர மேலாண்மை மற்றும் நோய் கட்டுப்பாடு குறித்து மீனவர்களுக்குப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை வழங்குகிறது.

ஆரம்பத்தில் நண்டுகள் இறந்ததும், நோய் பரவல்களும் சவாலாக இருந்தபோதிலும், சுயஉதவிக் குழுவினர் சரியான பயிற்சி மற்றும் வளர்ப்பு நுட்பங்களைப் பயன்படுத்தி, இந்தச் சவால்களுக்கு தீர்வு கண்டனர். இதன் மூலம், அவர்கள் நண்டுகளை பெரிதாக வளர்ப்பதில் செயல்திறனையும், நிலைத்தன்மையையும் மேம்படுத்த முடிந்தது.

சிறந்த நண்டு வளர்ப்பு முறைகளை உள்ளூர் சமூகத்தினருக்குக் காட்சிப்படுத்தவும், அவர்களை ஊக்குவிக்கவும், இந்த மையம் ஒருங்கிணைந்த சதுப்புநில மீன் வளர்ப்பு மற்றும் நண்டு வளர்ப்புத் திட்டங்களுக்கான மாதிரி குளங்களை முன்னோடியாக உருவாக்கியது. இந்த முயற்சிகள், நிலைப்புத்தன்மையுள்ள நண்டு வளர்ப்பு முறைகளின் ஆற்றலை நிரூபித்தன. இத்திட்டத்தின் விளைவாக, மொத்தம் ரூ. 1,51,450 வருமானம் ஈட்டப்பட்டது. இதன் மூலம், பங்கேற்ற சமூக உறுப்பினர்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகள் வழங்கப்பட்டு, அவர்களின் நிதிசார் சுதந்திரம் மேம்படுத்தப்பட்டது.

### 3. கொடுவா மீன் குஞ்சு வளர்ப்பு மேலாண்மை

கொடுவா மீன் குஞ்சு வளர்ப்பு அமைவிட வசதியை, மத்திய உவர் நீர் மீன்வளர்ப்பு நிறுவனத்துடன் இணைந்து மாதம்பட்டினம் கிராமத்தில் நிறுவியுள்ளன. உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கம். இந்த அலகில் உள்ள 22 சிறிய கூண்டுகள், சரியான நீர் சுழற்சி மற்றும் திறன்மிக்க குஞ்சு வளர்ப்பை உறுதி செய்வதால் இத்திட்டம் குறிப்பிடத்தக்க வெற்றியைக் கண்டுள்ளது. முதல் கட்டத்தில், 7,000 கொடுவா மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு, 34.31% உயிர் பிழைப்பு விகிதத்துடன் ரூ. 55,000 வருமானம் கிடைத்தது. இரண்டாவது கட்டத்தில், 10,000 குஞ்சுகள் விடப்பட்டதில், 52.8% உயிர் பிழைப்பு விகிதத்துடன் ரூ. 2,16,000 வருமானம் ஈட்டப்பட்டது. இத்திட்டத்தில், 20 பெண்கள் உட்பட மொத்தம் 44 குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன.

# சிறு அளவிலான மீன் வளர்ப்பில் கூட்டுச் செயல்பாடு மற்றும் நிலைத்தன்மைக்காக, மீன் விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்களை (ய்ய்ஊேளீவி) நிறுவி ஊக்குவித்தல்.

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் (MSSRF) ஒரு அங்கமான அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், இந்திய அரசின் மீன்வளத் துறை அமைச்சகத்தின் மத்திய துறை திட்டத்தின் கீழ், மீன் விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்களை (FFPOs) உருவாக்கி மேம்படுத்தும் தொகுதி சார்ந்த தொழில் அமைப்பாக (CBBO) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 1, 2022 அன்று தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB) வழங்கிய ஒப்புதலுக்குப் பிறகு, தமிழ்நாட்டின் மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலும் புதுச்சேரி மற்றும் கர்நாடகாவில் தனது பணிகளை இத்திட்டத்தின் கீழ் MSSRF தொடங்கியது. இம்மையம், தற்போது பின்வரும் மீன் விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்களை வெற்றிகரமாக உருவாக்கி, அவற்றை ஊக்குவித்து வருகிறது.

1. பாரதிதாசன் நன்னீர் மீன் விவசாய உற்பத்தியாளர் நிறுவனம்
2. மயிலாடுதுறை காவிரி மீன் விவசாய உற்பத்தியாளர் நிறுவனம்
3. கனரா கூண்டு மீன் விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் (டிசம்பர் 2024-இல் பதிவு செய்யப்பட்டது)

### மயிலாடுதுறை காவிரி மீன் விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் (MKFFPCL)

மயிலாடுதுறை காவிரி மீன் விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் (MKFFPCL), 150 பங்குதாரர்களுடன், ரூ. 1,50,000 பங்கு மூலதனத்தைத் திரட்டியுள்ளது. இந்நிறுவனம், உயிருள்ள புதிய மீன்கள், தரமான மீன் குஞ்சுகள் மற்றும் மீன் தீவன விற்பனையில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. சந்தையில் தனது நிலையை வலுப்படுத்தவும், தயாரிப்புகளைப் பல்வகைப்படுத்தவும், நவீனா அக்வா ஃபீடு போன்ற நிறுவனங்களுடன் கூட்டாண்மைகளை ஏற்படுத்தியுள்ளது. ஏப்ரல் 2024-இல், இந்நிறுவனம் வெற்றிகரமாக மீன்களை வாங்கி, இலாபகரமான விலையில் விற்பனை செய்து சந்தையில் தனது நிலையை வலுப்படுத்தியிருக்கிறது. மேலும், உயர்தரத்தில் பொருட்களை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர் திருப்தியையும் உறுதி செய்துள்ளது.

### பாரதிதாசன் நன்னீர் மீன் விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் (BFFFPCL)

பாரதிதாசன் நன்னீர் மீன் விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் (BFFFPCL), புதுச்சேரியில் உள்ள நன்னீர் மீன் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, 152 பங்குதாரர்களுடன் ரூ. 3,04,000 பங்கு மூலதனத்தைத் திரட்டி, நிலைத்தன்மையுள்ள மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதில் வெற்றிகரமான ஒரு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. மேலும், புதுமையான தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துவதற்காக ஐ.சி.ஏ.ஆர்.-மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனத்துடன் (CIFT) இணைந்து செயல்படுகிறது. புதிய மீன்கள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட கருவாடு போன்ற அதன் தயாரிப்புகள், உழவர்சந்தையில் உள்ள கடைகளுடன் செய்திருக்கும் மாத ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. பயிற்சிகள் மற்றும் கள விளக்கங்களை வழங்குவதன் வழியாக, மீன்வள நடைமுறைகளை மேம்படுத்துவதிலும், உள்ளூர் மீன்வளத் துறையின் வளர்ச்சிக்கும் இந்நிறுவனம் தொடர்ந்து பங்களித்து வருகிறது.

### கனரா கூண்டு மீன் விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் (KCFFPCL)

கனரா கூண்டு மீன் விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் (KCFFPCL), கர்நாடகாவில் உள்ள குமடாவில் டிசம்பர் 2024இல் 100 பங்குதாரர்கள் மற்றும் ரூ. 1,00,000 பங்கு மூலதனத்துடன், புதிதாகப் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்த நிறுவனம் நிலைப்புத்தன்மையுள்ள மற்றும் திறன்மிக்க கூண்டு மீன் வளர்ப்பு முறைகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. கூண்டு மீன் வளர்ப்பு, உயிருள்ள மீன் விற்பனை, தரமான மீன் குஞ்சுகள் உற்பத்தி மற்றும் இருப்பு வைத்தல் ஆகியவை நிறுவனத்தின் முக்கிய வணிக இலக்குகள் ஆகும். இந்த நிறுவனம், உள்ளூர் சந்தைக்கு உயர்தர மீன் பொருட்களை வழங்குவதிலும், மீன்வளத் துறையில் எதிர்கால வளர்ச்சிக்கு வலுவான அடித்தளத்தை அமைப்பதிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது.







# பயிற்சி அளிப்பு மற்றும் திறன் மேம்பாடு



## அனைவருக்கும் மீன் பயிற்சி மையம்

கடந்த 15 ஆண்டுகளாக, அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், கடலோர சமூகங்களில் ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கியிருக்கிறது. நிலைப்புத்தன்மையுள்ள மீன்வளம், மீன் வளர்ப்பு முறைகள் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை இம்மையம் செயல்படுத்தியுள்ளது. இதுவரை பயிலரங்குகள், பயிற்சி வகுப்புகள் மற்றும் விழிப்புணர்வுப் பிரசாரங்கள் என 1,146 பயிற்சி திட்டங்களை நடத்தி 1,10,902 நபர்களின் வாழ்க்கையில் நேரடியாக ஆக்கபூர்வத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இன்காய்ஸ் (INCOIS), நெட்ஃபிஷ் (NETFISH), மற்றும் நபார்டு (NABARD) ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து, ஏழு மாவட்டங்களில் உள்ள 504 கிராமங்களைச் சேர்ந்த 67,114 மீனவர்களுக்குப் பயிற்சி அளித்தது இம்மையத்தின் ஒரு குறிப்பிடத்தக்க சாதனை நிகழ்வாகும். இத்துடன், இம்மையம் பிரதான் மந்திரி சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தின் (PMFME) கீழ், ஒரு தனியார்துறை பயிற்சி கூட்டாளராகவும் தன்னை பதிவு செய்து, மீன்வளத் துறையில் சிறு தொழில்முனைவோருக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது.

### (I) கடல் வளம் மற்றும் மீனவர்கள் மேம்பாடு

மீன்பிடித் துறையின் கீழ், மீனவர்களின் திறன் மற்றும் அறிவை மேம்படுத்தும் நோக்கில், நிலையான மீன்பிடி முறைகள், கடல் பல்லுயிர் பாதுகாப்பு, மற்றும் மீன் தர மேலாண்மை குறித்த விரிவான பயிற்சித் திட்டங்களை இம்மையம் நடத்தி வருகிறது . பல மாவட்டங்களில் நடத்தப்பட்ட இத்திட்டங்கள், கூட்டு மேலாண்மை, சதுர கண்ணி வலை மீன்பிடி நுட்பங்கள், ஆமை பாதுகாப்பு சாதனம் (TEDs), கைவிடப்பட்ட, அறுந்துபோன, தூக்கிவீசப்பட்ட மீன்பிடி வலை (Ghost gear) மேலாண்மை, கடல் பாதுகாப்பு, டீசல் இன்ஜின் பழுது நீக்கம் மற்றும் போன்ற முக்கிய அம்சங்களை மையமாகக் கொண்டு செயல்பட்டன.. மொத்தம் 731 நிகழ்வுகள் நடத்தப்பட்டு 75,242 பங்கேற்பாளர்கள் இத்திட்டங்களின் மூலம் பயனடைந்துள்ளனர்.

"சதுர கண்ணி வலைகள் மீனவர்களின் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. அவை சிறிய மீன்களைப் பாதுகாப்பதுடன் , கடல் சூழலமைப்பை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் உதவுகின்றன. மேலும், மீன்களைப் பிரித்தெடுக்கும் நேரம் குறைவதால், மீனவர்களின் வேலை எளிதாகிறது. கூடுதலாக, குறைந்த எரிபொருள் செலவேஆவதால், மீன்பிடித்தலில் பொருளாதார செலவு குறைந்திருப்பதுடன், சுற்றுச்சூழலுக்கும் தோழமையானதாக மீன்பிடிப்பு மாறியிருக்கிறது" என்கிறார் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த என்.ஜே. போஸ்

பேய் வலைகள் அகற்றுதல் குறித்த பயிற்சி, ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். முன்பு அவற்றால் ஏற்படும் சுற்றுச்சூழல் அபாயங்களைப் பற்றி அறியாத மீனவர்கள், இப்பயிற்சியின் மூலம் தாங்களாகவே மீன்பிடிக்கும்போது, கைவிடப்பட்ட வலைகளை கடலிலிருந்து சேகரிக்கின்றனர். இந்த நடவடிக்கை, கடல்வாழ் உயிரினச் சூழலில், பேய் வலைகள் இருப்பைக் கணிசமாகக் குறைத்துள்ளது. மேலும், ஆமைகள், டால்பின்கள் மற்றும் மீன்கள் போன்ற உயிரினங்களுக்கு இதனால் ஏற்படும் தீங்கு குறித்த விழிப்புணர்வும் அதிகரித்துள்ளது. கைவிடப்பட்ட வலைகளை சீராக்கி, மறுசுழற்சி செய்வது குறித்த பயிற்சி, மீனவப் பெண்களுக்கு ஒரு நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கியுள்ளது. சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களாக மாற்றும் திறன், அவர்களுக்கு கற்றுத் தரப்பட்டுள்ளது. இந்தச் செயல்பாடுகள், பெண்களுக்கு நிலையான வருமானம் கிடைப்பதை உறுதி செய்திருப்பதுடன், கடல் வளப் பாதுகாப்பிற்கும் உதவியாகவுள்ளது. டீசல் இன்ஜின் பழுதுபார்த்தல் நேரடிப் பயிற்சி, மீனவர்களின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தி, படகுகளின் செயல்திறனை அதிகரித்ததோடு, செலவுகளையும் குறைத்துள்ளது. இந்த முயற்சிகள், மீன்பிடித்தலை பொருளாதார ரீதியாகவும், சுற்றுச்சூழல் ரீதியாகவும் நிலையானதாக மாற்றியுள்ளன. ஆமை பாதுகாப்புச் சாதனம் (TEDs) போன்ற, தேவையற்ற கடல்வாழ் உயிரினங்களை (துணைப்பிடிப்பை) பிடிப்பதை குறைக்கும் சாதனங்களை ஊக்குவித்ததும் ஒரு முக்கிய நடவடிக்கையாகும் மீனவர்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்பு பயிற்சியினால், ஆமைகள் வலையில் சிக்குவது தடுக்கப்படுவதுடன், மீன்பிடித் திறனும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

"ஆமை பாதுகாப்புச் சாதனத்தைப் பயன்படுத்திய பிறகு, நான் ஒரு பெரிய மாற்றத்தைக் கண்டேன். இது எங்கள் மீன் பிடிப்பைக் குறைக்காமல், ஆமைகள் தப்பித்துச் செல்ல உதவுகிறது. குறிப்பாக, இறால் பிடிக்கும் நேரத்தில் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. தற்போது மீன்பிடித்தல் மூலமாக ஆமைகளைப் பாதுகாக்கிறேன் என்ற மனநிறைவு எனக்குக் கிடைக்கிறது," என்கிறார்

மண்டபத்தைச் சேர்ந்த சுதர்சன்.

## (2) மீன்பிடிப்பிற்கு பிந்தைய மீன்வள செயல்பாடுகள்

மீன்பிடிப்பிற்குப் பிந்தைய மீன்வள செயல்பாடுகளில், மீனவப் பெண்களுக்கு பதப்படுத்துதல் குறித்த தொடர் பயிற்சிகளை இம்மையம் வழங்கியுள்ளது. இதன் முக்கிய நோக்கம் அவர்களுக்கு திறன்வளத்தை மேம்படுத்தல், செயலாக்கம், பதப்படுத்தல், மதிப்புக்கூட்டல், தர மேலாண்மை மற்றும் தொழில்முனைவு போன்ற திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதாகும். இதில், குறிப்பாக சுகாதாரத்தை மேம்படுத்துவது மற்றும் நிலையான நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மொத்தம் 27,315 பங்கேற்பாளர்கள் பயனடைந்துள்ளனர்.

மீன் பாதுகாப்பு மற்றும் கையாளுதல் முறைகளில், FAO வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதில் அதிக முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மீன் பதப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பில், அதன் தரத்தை நிலைநிறுத்தும் பாதுகாப்பான நுட்பங்கள் ஊக்குவிக்கப்பட்டன. அத்துடன், மீனவர்களுக்கு படகில் மற்றும் தனிப்பட்ட சுகாதாரம் பேணப்படுவது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த நடவடிக்கைகள், மீன் பொருட்களின் தரத்தை அதிகரித்ததோடு மட்டுமல்லாமல், அவற்றின் சந்தை மதிப்பையும், மீனவர்களின் வருமானத்தையும் உயர்த்தி உள்ளன.

மீனவப் பெண்களுக்கு அதிகாரமளிக்கும் நோக்குடன், அவர்களுக்கு மீன் மதிப்புக்கூட்டல், டிஜிட்டல் மற்றும் நிதி மேலாண்மை, மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. நபார்டு (NABARD) நிறுவனத்தின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் விரிவாக்கத் திட்டம் (LEDP) மற்றும் இணையவழி கல்வித் திட்டங்கள் மூலம், 32 சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 270 பெண்களுக்கு, 15 நாட்கள் தீவிரப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சியில், மீன் பதப்படுத்துதல் மற்றும் மீன்பிடித்தலுக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் கற்றுத்தரப்பட்டன. பெண்கள் பதப்படுத்துதல் நுட்பங்களை மேம்படுத்தவும், புதிய தயாரிப்புகளை உருவாக்கவும், நிலையான வாழ்வாதார வாய்ப்புகளைப் பெறவும் இது வழிவகுத்தது. இத்திட்டங்கள் மீன் உற்பத்தித் திறன்களை அதிகரித்ததுடன், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள், சந்தைப்படுத்துதல், மற்றும் நிதி மேலாண்மை பற்றிய அறிவையும் வழங்கி, ஒரு வெற்றிகரமான தொழில்முனைவோராக மாறுவதற்கான முழுமையான அடித்தளத்தை அவர்களுக்கு அமைத்து தந்துள்ளது.

பயிற்சி பெற்ற குழுக்கள், தாங்கள் கற்றுக்கொண்ட திறன்களையும் அறிவையும் அன்றாட மீன்பிடி நடவடிக்கைகளில் சிறப்பாகப் பயன்படுத்தி வருகின்றன. உதாரணமாக, வானகிரியில் உள்ள நட்சத்திர குழு, 1,054 கிலோ கருவாட்டை ரூ. 2,48,268 விற்பனை செய்து ரூ. 35,784 வருவாயையும் ஈட்டியுள்ளது. வாட்ஸ்அப் வழியாக இணையவழிச் சந்தையை உருவாக்கியதன் மூலம், இந்தக் குழு அதிக வாடிக்கையாளர்களைச் சென்றடைந்துள்ளது. இதனால் அவர்களின் வருவாயும், தொழில்முனைவோர் திறன்களும் அதிகரித்துள்ளன.

“இந்த மையத்தின் பயிற்சிகள் என் தொழிலை மட்டுமல்லாமல், வாழ்க்கை மீதான எனது கண்ணோட்டத்தையும் மாற்றியுள்ளன. இன்று, நான் பெருமையுடன் என்னை ஒரு நவீன தொழில்முனைவோர் என்று அழைத்துக்கொள்கிறேன். இந்த நிலையை நான் அடைய உதவிய வாய்ப்பளித்த இம்மையத்திற்கு நான் நன்றி கூறுகிறேன்,” என்கிறார் கடலூரைச் சேர்ந்த திருமதி. வளர்மதி.

## (3) மீன் வளர்ப்பு பண்ணைகள்

மீன் வளர்ப்பு பண்ணைகள் பிரிவில், நிலையான மீன் வளர்ப்பு முறைகள் மற்றும் ஒருங்கிணைந்த மீன்வள அணுகுமுறைகள் குறித்த பயிற்சித் திட்டங்களை வழங்கி, முன்னேற்றத்தை சாத்தியமாக்கியிருக்கிறது இம்மையம். நோய் மேலாண்மை, உயிர்ப் பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ப்பு முறைகள் போன்ற சவால்களுக்கு இத்திட்டங்கள் தீர்வு காண்கின்றன. அத்துடன், சதுப்புநில நண்டு வளர்ப்பு, கொடுவா மீன்களை கூண்டில் வளர்த்தல் மற்றும் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு பண்ணை போன்ற புதிய நுட்பங்களையும் ஊக்குவிக்கின்றன.

மொத்தம் 46 நிகழ்வுகள் மூலம், 2,700-க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதன் வழியாக, அவர்கள் தங்கள் வாழ்வாதாரங்களைப் பல்வகைப்படுத்தத் தேவையான அறிவையும், திறன்களையும் பெற்றுள்ளனர். இந்த முயற்சிகள், கடலோர சமூகங்களின் பொருளாதார மீள்திறனை அதிகரித்ததோடு, நிலையான மீன் வளர்ப்பு முறைகள் குறித்த ஒரு ஆழமான புரிதலையும் அவர்களுக்குள் உருவாக்கியுள்ளது.

## (4) சிறப்புத் திட்டங்களுக்கான பயிற்சி

இந்த மையம் நடத்திய சிறப்புத் திட்டங்கள், மொத்தம் 4,900 பங்கேற்பாளர்களைச் சென்றடைந்து, உடல்நலம், ஊட்டச்சத்து மற்றும் பெருந்தொற்றிலிருந்து மீள்திறன் போன்ற முக்கியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளன. மீன் விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் தலைமைச் செயல் அலுவலர்களுக்கு, இலக்கு சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டன. இது அவர்களின் செயல்பாட்டு மற்றும் நிதித் திட்டமிடல் திறன்களை மேம்படுத்தி, விவசாயக் கூட்டுறவு நிறுவனங்களை வலுப்படுத்த உதவியது. குறிப்பாக, கோவிட்-19 பெருந்தொற்றின்போது, 3,000-க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுக்கு நடத்தப்பட்ட விழிப்புணர்வுத் திட்டங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

மேம்பட்ட தொழில்நுட்ப விழிப்புணர்வு பயிற்சித் திட்டங்களில் ஆசிரியர்களும் ஈடுபடுத்தப்பட்டனர். இதன் மூலம் கல்வி வழங்கும் திறனை மேம்படுத்தி, மையத்தின் முயற்சிகளின் பயன்கள் மீன்வளத் துறையைத் தாண்டி, சமூக மேம்பாட்டின் பிற பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.



## மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கான சான்றிதழ் படிப்புகள்

அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், உள்ளூர் கல்லூரிகளுடன் இணைந்து திறன் மேம்பாட்டில் சிறப்பான பணிகளைச் செய்துள்ளது. இந்த முயற்சியில், களப்பயணங்கள், பயிலரங்குகள், மற்றும் நேரடிப் பயிற்சிகள் இடம்பெற்றன. இதன் மூலம், இதுவரை 892 மாணவர்களும், 32 ஆசிரியர்களும் பயனடைந்துள்ளனர்.

சமுதாயக் கல்லூரி சான்றிதழ் படிப்புகள் மூலம் 220 சமூக உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். இதன் காரணமாக, இந்தத் திட்டம் சென்றடையும் எல்லை விரிவடைந்துள்ளது. மொத்தமாக, 1,144 பேர் மதிப்புமிக்க அறிவையும் திறன்களையும் பெற்றுள்ளனர். மற்ற மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளும் இந்த சான்றிதழ் படிப்புகளில், பங்கேற்க ஆர்வம் காட்டி வருகின்றனர்.

| 892 மாணவர்கள் | 32 ஆசிரியர்கள் |
|---|---|
| 220 சமூக உறுப்பினர்கள் | |
| 1,144 தனிநபர்கள் | |

## ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி' திட்டம் மூலம் கடலோரப் பகுதிகளில் உள்ள இளையோருக்கு உத்வேகம் அளித்தல்

| 636 மாணவர்கள் | 18 தொகுப்புகள் |
|---|---|

ஆகஸ்ட் 2022-ல், MSSRF -ன் 33-வது ஆண்டு விழாவின்போது, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்களால் "ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி" (ECAS) திட்டம் தொடங்கப்பட்டது. எமது மையத்தைச் சுற்றியுள்ள கடலோரப் பகுதிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் சிந்தனையில் இத்திட்டம் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை, 18 தொகுப்புகளாக, 636 மாணவர்களுக்கு (315 ஆண்கள், 321 பெண்கள்) நேரடி அறிவியல் கல்வி வழங்கப்பட்டுள்ளது. இது மாணவர்களிடையே ஆர்வம், படைப்பாற்றல், மற்றும் கற்கும் ஆர்வத்தை வளர்க்கிறது. இதன் மூலம், அவர்களுக்கு அறிவியல் அறிவு மற்றும் செய்முறைத் திறன்கள் கிடைப்பதுடன், அறிவியலின் மீது ஒரு ஆழமான ஈடுபாடும் ஏற்படுகிறது. இது அவர்களின் கல்வி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

மாணவர்கள், தாங்கள் பெற்ற அனுபவங்கள் மூலம், அவர்களின் வளர்ச்சி மற்றும் உற்சாகத்தை வெளிப்படுத்தியுள்ளனர். பூம்புகார், 11-வது ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவி நித்யஸ்ரீ தனது அனுபவத்தை கீழ்வருமாறு பகிர்ந்துகொண்டார். "ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி (ECAS) வகுப்புகளில் கலந்துகொண்ட பிறகு, என் சமையலறை காய்கறிக் கழிவுகளைக் கொண்டு உரம் தயாரிக்க ஆரம்பித்தேன். மீன்களின் அறிவியல் பெயர்கள், ஊட்டச்சத்து மதிப்பு, மீன்பிடி முறைகள், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள், மற்றும் சூரிய உலர்த்திகளைப் பயன்படுத்திச் சுகாதாரமாக கருவாடு உலர்த்துவது எப்படி என்பதையும் கற்றுக்கொண்டேன். நான் கற்றுக்கொண்ட இந்த அறிவை இப்போது என் பெற்றோரிடமும் பகிர்ந்துகொள்கிறேன்."

"ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி (ECAS) வகுப்பில் நான் கற்றுக்கொண்ட கால அட்டவணையில் உள்ள தனிமங்களின் பெயர்களை, எங்கள் பள்ளி பிரார்த்தனையின் போது மிகுந்த நம்பிக்கையுடன் கூறினேன். இதனால், இப்போது அறிவியல் செய்முறைகளை என்னால் எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. முன்பு பாடங்களை மனப்பாடம் செய்து வந்த நான், இப்போது கருத்தாக்கங்களை தெளிவாகப் புரிந்துகொள்கிறேன்," என்று காவிரிப்பூம்பட்டினம் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர் மணீஷ் தேவன் கூறினார்.

மாணவர்களின் மனப்பான்மை மற்றும் திறன்களில் ஒரு பெரிய மாற்றத்தை ஆசிரியர்களும், பெற்றோர்களும் கவனித்திருப்பதால், இந்தத் திட்டம் வகுப்பறைக்கு அப்பாலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது தெரிய வருகிறது. அறிவியல் மற்றும் ஆராய்ச்சியில் மாணவர்களின் ஆர்வம் அதிகரித்திருப்பதைக் குறிப்பிட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் தாங்களாகவே முன்வந்து அறிவியல் மாதிரிகளை உருவாக்கி, சக மாணவர்களையும் அத்தகைய முயற்சிகளில் பங்கேற்க ஊக்குவிப்பதாகத் தெரிவித்துள்ளனர். இதேபோல், மாணவர்கள் தங்கள் கற்றலை அன்றாட வாழ்க்கையுடன் இணைத்து, வீட்டிலுள்ள பாரம்பரிய அறிவுக்கும் பங்களிப்பதால், படிப்பில் அவர்களுக்கு கூடுதல் ஆர்வம் காட்டுவதாக பெற்றோர்களும் தெரிவித்துள்ளனர். உதாரணமாக, ஒரு மாணவியின் தாய், தனது மகள் ECAS திட்டத்தில் பங்கேற்றது அவளுடைய கல்விச் செயல்திறனை மேம்படுத்தியது மட்டுமல்லாமல், மீன்வளம் மற்றும் வள மேலாண்மை குறித்த அவளுடைய அறிவு, குடும்பத்திற்கும் உதவியதாகப் பகிர்ந்து கொண்டார்.

மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (CMFRI), வேளாண் அறிவியல் மையம் (KVK), மற்றும் மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு நிறுவனம் (CIBA) போன்ற புகழ்பெற்ற நிறுவனங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள், மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் நோக்கில் சிறப்பு காணொளிக் கருத்தரங்குகளை நடத்தினர். இந்தக் கருத்தரங்குகள் மூலம், மாணவர்கள் உயர் அறிவியல் கருத்துக்களைத் தெரிந்துகொண்டதுடன், அறிவியலின் செய்முறைப் பயன்பாடுகளை ஆராயவும் உத்வேகம் பெற்றுள்ளனர்.

இளம் விஞ்ஞானிகளின் தலைமுறையை உருவாக்கும் ECAS திட்டம், அவர்களைக் கற்றலின் மூலம் சிந்திக்கவும், பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு அர்த்தமுள்ள பங்களிப்புகளைச் செய்யவும் ஊக்குவிக்கிறது. இத்திட்டம், எதிர்காலத்தை உருவாக்குவதில் செய்முறைக் கல்வி கொண்டுள்ள உருமாற்ற ஆற்றலுக்கு ஒரு சிறந்த சான்றாகும்.



## ICT அடிப்படையிலான கிராம வள மையம் மற்றும் கிராம அறிவு மையங்கள்

**192 கிராமங்கள் இணையத்தின் மூலமாக இணைக்கப்பட்டுள்ளன**

**24/7 உதவி மையம் மூலம் 1.1 லட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர்**

**உதவி மையத்திற்கு 50,000 அழைப்புகள் வந்துள்ளன**

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் கடலோரப் பகுதிகளில் உள்ள சமூகங்கள், தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான கிராம வள மற்றும் அறிவு மையங்களால் பெருமளவு பயனடைந்துள்ளனர். 192 கிராமங்கள், அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்துடன் இணையத்தின் மூலமாக இணைக்கப்பட்டுள்ளன. மீன்வளம், கல்வி, சுகாதாரம் மற்றும் மீன் வளர்ப்பு சார்ந்த தகவல்களைப் பெறுவதற்கான முக்கிய ஆதாரங்களாக இம்மையங்கள் செயல்படுகின்றன. 24 மணிநேரமும் செயல்படும் உதவி மையத்தின் மூலம் 1.1 லட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகள், நிகழ்நேர கடல் நிலை முன்னறிவிப்புகள், மீன்பிடி மண்டலங்கள், புயல் மற்றும் அலை எச்சரிக்கைகள் போன்ற அவசியமான சேவைகளைப் பெறுகின்றனர். இச்சேவைகள் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துகின்றன. மேலும், அரசாங்கத் திட்டங்கள், கடல் பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் நவீன தொழில்நுட்பங்களான ஜி.பி.எஸ் (GPS), மீனவ நண்பன் மொபைல் செயலி (FFMA) ஆகியவை பற்றிய வழிகாட்டுதல்களையும் மீனவர்கள் பெற்றுள்ளனர். 50,000-க்கும் அதிகமான அழைப்புகளை இவ்விரண்டு உதவி மையம் பெற்றுள்ள நிலையில், இம்மையங்கள் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, நிலையான மீன்பிடி முறைகள், நிதி சேவைகள் மற்றும் வளங்களுக்கான அணுகல் போன்ற அறிவுடன் அவர்களை வலுப்படுத்துகின்றன. இந்த முயற்சி, மீனவர்கள் தங்களது சுற்றுச்சூழலுடன் புத்திசாலித்தனமாக இடைவினையாற்றவும், பாதுகாப்பான, அதிக நிலைத்தன்மையுள்ள மீன்பிடிப்பு நடைமுறைகளை பின்பற்றவும் உதவுகிறது.












பயிற்சி மையம்
TRAINING CENTRE










NCCR



# சிறப்புத் திட்டங்கள்



## இருளர் பழங்குடியின சமூகம்: தடைகளைத் தகர்த்து, மீள்திறனைக் கட்டமைத்தல்

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் (MSSRF), பிச்சாவரம் பகுதியில் சதுப்புநில சூழலமைப்பு மீது இருளர் பழங்குடியினர் கொண்டிருக்கும் உள்ளார்ந்த அறிவு மற்றும் பிணைப்பை அங்கீகரித்து ஒரு முன்னோடி சதுப்புநில மேலாண்மைத் திட்டத்தில் அவர்களை ஈடுபடுத்தியது. அவர்களின் பாரம்பரிய மீன்பிடித் திறன்களைப் பயன்படுத்தி, சதுப்புநிலக் காடுகளை மீட்டெடுக்கும் மற்றும் பாதுகாக்கும் முயற்சிகளில் வெற்றிகரமாக இணைந்து செயல்படுகிறது. இந்த புதுமையான முயற்சி, சதுப்புநிலச் சூழல் அமைப்பை மீட்டெடுத்ததோடு மட்டுமல்லாமல், உப்பங்கழி மீன்பிடி மூலம் இருளர் சமூகத்திற்கு நிலையான வருவாயை உருவாக்கி, வாழ்வாதாரத்தைப் பாதுகாத்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தியது. குறிப்பிடத்தக்க வகையில், கிள்ளை மற்றும் பிச்சாவரம் பகுதியைச் சேர்ந்த இருளர் இன மக்கள் பாரம்பரிய மீனவர்களைப் போல் அல்லாமல், இறால், மீன் மற்றும் மட்டி ஆகியவற்றை சதுப்புநிலக் காடுகளிலிருந்து சேகரிப்பதன் மூலம் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

வெள்ளாறு முகத்துவாரம் மற்றும் பிச்சாவரம் சதுப்புநிலக் காடுகளில் கழுத்தளவு நீரில் நீண்ட நேரம் செலவழித்து, தங்கள் கைகளால் இறால் மற்றும் சிறு மீன்களைப் பிடிப்பதில் இருளர் பெண்கள் சிறந்து விளங்குகின்றனர். எனினும், இந்த மீன்பிடி முறைகள் அவர்களுக்குப் பல உடல்நல அபாயங்களை ஏற்படுத்துகின்றன. பொதுவான ஆபத்துகளாக கெளுத்தி மீன் கொட்டுதல், உடல் வலி மற்றும் மோசமான காலநிலை பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர். இறால் பிடிப்பில் ஈடுபடும் பெண்களுக்கு சிப்பி வெட்டுக் காயங்கள், பாம்புக்கடிகள் மற்றும் தோல் அரிப்பு போன்ற கூடுதல் உடல்நலப் பிரச்சனைகளும் ஏற்படுகின்றன.

கடலூர் மாவட்டத்தில், 1,000-க்கும் மேற்பட்ட இருளர் பழங்குடியின குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்களுக்குத் தீர்வுகாண, எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் (MSSRF) ஒரு விரிவான திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. கல்வி, சுகாதாரம் மற்றும் நிலையான வாழ்வாதார மேம்பாடுகள் மூலம் அவர்களுக்கு உதவுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

### திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

கிராம அறிவு மையங்கள் (VKC): கலைஞர் நகர் மற்றும் எம்.ஜி.ஆர். நகரில் செயல்படும் இந்த மையங்கள், கல்வி, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, மற்றும் வேலைவாய்ப்பு குறித்த முக்கிய சேவைகளை வழங்குகின்றன.

கல்வி கற்றல் மையம்: ஐந்து இருளர் கிராமங்களைச் சேர்ந்த 107 மாணவர்களுக்காக MSSRF அமைத்துள்ள பயிற்சி மையங்கள், அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும், தன்னம்பிக்கை பெறுவதற்கும் உதவுகின்றன.

தொழில்சார் அபாயங்கள் குறைப்பு: 250 இருளர் பெண் மீனவர்களின் பாதுகாப்புக்காக, MSSRF ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இதன் கீழ், காயம் மற்றும் உடல்நலப் பிரச்சினைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்க ரப்பர் காலணிகள், கண்ணாடி, மற்றும் பிற துணைப் பொருட்கள் அடங்கிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

உடல்நலப் பாதுகாப்பு: இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, குறித்த காலஅளவுகளில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, சமூகத்தினரின் உடல்நலத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. மேலும், அவர்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய உடல்நல அபாயங்கள் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது.

இந்த ஒருங்கிணைந்த முயற்சிகளின் மூலம், MSSRF இருளர் சமூகத்திற்கு அங்கீகாரமளித்து, அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதுடன், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் சார்ந்த சவால்களை எதிர்கொள்ளும் திறன்களையும் அதிகரித்து வருகிறது.

## கோவிட்-19 க்கு பதில்வினை மற்றும் மீட்சிக்கான முன்னெடுப்புகள்

இந்தியாவின் மீன்வளத் துறை, கோவிட்-19 பெருந்தொற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதன் விளைவாக, மீன் உற்பத்தி மற்றும் விநியோகம் தடைபட்டதோடு, மீன் சார்ந்த உணவுகள் கிடைப்பதிலும் சிக்கல் ஏற்பட்டது. இந்த இக்கட்டான சூழ்நிலையில், "அனைவருக்கும் மீன்" ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், பாதிக்கப்பட்டுள்ள மீனவ சமூகங்களுக்கு உடனடியாக உதவ முன்வந்தது. "அனைவருக்கும் மீன்" ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் மேற்கொண்ட உடனடி பதில்வினை நடவடிக்கைகள்

1. மீனவர்களுக்கு அத்தியாவசியத் தகவல்களை மீனவ நண்பன் மொபைல் செயலி, வாட்ஸ்அப், மற்றும் தொலைபேசி மூலம் வழங்கியது.
2. சமூக இடைவெளியை கடைபிடித்த அதே நேரத்தில், மீன் விவசாயிகளுக்கு மீன்பிடிப்பை தொடர்ந்து மேற்கொள்ளவும்,

மீன்களை விற்கவும் உதவியது.

3. மீனவர்கள் எதிர்கொண்ட பிரச்சனைகளை ஆவணப்படுத்தி, தேவையான ஆதரவை வழங்க மாவட்ட நிர்வாகங்களுக்கு தகவலளித்தது.
4. இணையவழி மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியதோடு, கடலோர கிராமங்களில் விழிப்புணர்வு பதாதைகளை காட்சிப்படுத்தியது; 24/7 உதவி மையம் மூலம் ஆதரவை வழங்கியது.

கோவிட்-19 நிவாரணத் திட்டம்: தமிழ்நாட்டின் இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் உள்ள 15,000 குடும்பங்களுக்குப் பயனளிக்கும் வகையில், ஒரு கோவிட்-19 நிவாரணத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டம், இரண்டு முக்கிய தொகுப்புகளை உள்ளடக்கியதாக இருக்கிறது:

1. சுகாதாரத் தொகுப்பு: இத்திட்டத்தின் கீழ், பெண்கள், குழந்தைகள், மற்றும் வயதான மீனவர்கள் உட்பட 5,000 குடும்பங்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு வழங்கப்பட்டது. அத்துடன், 55,000 முகக்கவசங்களும் 1,000 லிட்டர் கை சுத்திகரிப்பான்களும் வழங்கப்பட்டன.
2. வாழ்வாதாரத் தொகுப்பு: மீன்களைச் சுகாதாரமான முறையில் எடுத்துச் செல்வதற்காக, 500 பெண் மீன் விற்பனையாளர்கள் மற்றும் சிறிய படகு மீனவர்களுக்கு 50 லிட்டர் கொள்ளளவுள்ள ஐஸ் பெட்டிகள் வழங்கப்பட்டன.

பெருந்தொற்றுக் காலத்தில் பாதிக்கப்பட்ட மீனவ சமூகங்களுக்கு உதவுவதிலும், அவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை உறுதி செய்வதிலும் எங்களின் அர்ப்பணிப்பை இந்தத் திட்டங்கள் வெளிப்படுத்துகின்றன.

## கடலோர சமூகங்களுக்கு ஊட்டச்சத்து செறிவூட்டப்பட்ட உப்பு வழங்குதல்

கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்களிடையே, நுண்ணூட்டச்சத்துக் குறைபாடு ஒரு முக்கிய உடல்நலப் பிரச்சினையாக உள்ளது. இந்தியாவின் 76% மக்கள் அயோடின் கலந்த உப்பை உட்கொண்டாலும், இரும்பு மற்றும் பிற நுண்ணூட்டச் சத்துக்களைச் சேர்ப்பதன் மூலம் இந்தக் குறைபாடுகளைக் களைய இன்னும் வாய்ப்புள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக, சுந்தரம் வேதியல் நிறுவனத்துடன் இணைந்து, "அனைவருக்கும் மீன்" ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் (FRTC), கடலோர சமூகங்களிடையே ஊட்டச்சத்து செறிவூட்டப்பட்ட உப்பின் மீது விழிப்புணர்வை பரப்பி வருகிறது. நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் உள்ள 3,000-க்கும் மேற்பட்ட மீனவர்களிடம், சமச்சீரான உணவின் அவசியம் மற்றும் அயோடின் உப்பின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மக்களின் பசியைக் குறைக்கும் நோக்கில், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள 2,320 குடும்பங்களுக்கு 16.3 டன் ஊட்டச்சத்து செறிவூட்டப்பட்ட உப்பை நாங்கள் விநியோகித்துள்ளோம். இந்த முயற்சி, கடலோர சமூகங்களின் ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்துவதில் நாங்கள் கொண்டுள்ள உறுதிப்பாட்டைக் காட்டுகிறது.

## மாணவர் பயிற்சி மற்றும் வெளிப்புறக் களப்பயணங்கள்

அனுபவபூர்வ கற்றலுக்கான ஒரு மையமாக, இந்த மீன்வள, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் (FRTC) திகழ்கிறது. தமிழ்நாடு, புதுச்சேரி, கர்நாடகா, மற்றும் மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் இருந்து 1,831-க்கும் அதிகமான மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்கள் இங்கு வந்துள்ளனர். உள்ளகப் பயிற்சி, களப்பயணங்கள், மற்றும் குறுகிய காலப் படிப்புகள் மூலம், அவர்கள் சிறப்பான செய்முறை அனுபவங்களைப் பெற்றுள்ளனர். ஒரு நாள் முதல் மூன்று மாதங்கள் வரையிலான இந்த திட்டங்களின் கீழ் அறிவியல் கோட்பாடுகள் எவ்வாறு எளிமைப்படுத்தப்பட்டு, கடலோர சமூகங்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை மாணவர்கள் நேரடியாக அறிந்துகொண்டனர். இந்த தனித்துவமான வாய்ப்பு, மாணவர்கள் பின்வரும் பலன்களைப் பெற உதவியது:

1. நிலையான மீன்வள மேலாண்மை, கடலோரப் பாதுகாப்பு மற்றும் சமூக மேம்பாடு குறித்த அறிவைப் பெறுதல்.
2. உள்ளூர் மீனவ சமூகத்தினருடன் கலந்துரையாடி, அவர்களின் சவால்களையும் புதுமையான தீர்வுகளையும் புரிந்துகொள்ளுதல்.
3. களப்பணி, தரவு சேகரிப்பு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் பங்கேற்றல்.
4. மாறுபட்ட சிந்தனை (உயர் சிந்தனை), சிக்கலைத் தீர்த்தல் மற்றும் குழுப்பணி போன்ற திறன்களை வளர்த்துக் கொள்ளுதல்.
5. அறிவியல், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கு இடையிலான ஒன்றோடொன்று இணைந்த தொடர்பைப் பற்றி ஆழமான புரிதலை வளர்த்துக் கொள்ளுதல்.

FRTC - ன் அனுபவக் கல்வித் திட்டம், மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அவர்களைச் சுற்றுச்சூழலின் பொறுப்பான பாதுகாவலர்களாகவும், நிலையான மேம்பாட்டின் முன்னோடிகளாகவும் உருவாகத் தூண்டியுள்ளது. கோட்பாட்டிற்கும் நடைமுறைக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைத்து, கடலோர சமூகங்களில் நேர்மறையான மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய அடுத்த தலைமுறைத் தலைவர்களை உருவாக்க FRTC வழிவகுத்துள்ளது.

# உள்ளூர் தலைவர்களுக்கு அதிகாரம் அளித்தல்: சமூக உறுப்பினர்களை நிபுணர்களாக உருவாக்குதல்

"அனைவருக்கும் மீன்" ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் (FRTC), உள்ளூர் இளைஞர்கள், பெண்கள் மற்றும் மீனவர்களைத் தங்கள் சமூகத்தின் தலைவர்களாகவும், முன்னோடிகளாகவும் மாற்றுவதற்கான ஒரு முன்னோடித் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இந்த முயற்சி, கடலோரச் சூழல் அமைப்புகளில் நிலைத்தன்மையையும் மீள்திறனையும் மேம்படுத்துவதன் மூலம், வருங்காலத் தலைமுறையினருக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசிய இணைய கல்வி மையம் (NVA) பயிற்சியாளர்கள்: பாரம்பரியத்தையும் புதுமையையும் இணைத்தல்

எங்களுடைய 8 பதேசிய இணைய கல்வி மையம் பயிற்சியாளர்கள், மையத்திற்கும் சமூகத்திற்கும் இடையே ஒரு இணைப்பு பாலமாக செயல்படுகின்றனர். பாரம்பரிய அறிவு மற்றும் நவீன வழிமுறைகளை இணைத்து, இப்பயிற்சியாளர்கள் பின்வரும் செயல்பாடுகளை வலுப்படுத்துகின்றனர்:

1. நிலைப்புத்தன்மையுள்ள மீன்பிடி முறைகளை ஊக்குவித்தல் மற்றும் கடல் வளங்களைப் பாதுகாத்தல்.
2. கடலோரச் சூழல் அமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் பல்லுயிர் தன்மைகளை பாதுகாத்தல்.
3. மீனவ சமூகங்களின் சமூக-பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துதல்.

## மீனவ நண்பன் மொபைல் செயலியின் (FFMA) தூதுவர்கள்: மின்னணு அதிகாரம் பெறுதலின் வெற்றியாளர்கள்

எங்களுடைய 144 மீனவ நண்பன் (FFMA) தூதுவர்கள், அதன் பயன்பாட்டின் முக்கியத்துவத்தை மீனவர்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் செயலியின் நன்மைகள் குறித்து அவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர். அந்த நன்மைகள்:

1. அவசரகால பதில்வினை திறனையும், பேரிடர் தயார்நிலையை மேம்படுத்துதல்.
2. மீன்பிடி முறைகளை மேம்படுத்துதல் மற்றும் கழிவுகளைக் குறைத்தல்.
3. சந்தை இணைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் வருமானத்தை அதிகரித்தல்.

இந்தத் தூதுவர்களின் அர்ப்பணிப்பால், செயலியின் பயன்பாடு வெகுவாக அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, பல பிராந்தியங்களில் உள்ள மீனவ சமூகங்களின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளது.

## முதன்மைப் பயிற்சியாளர்கள்: சமூகக் கல்வியாளர்கள்

எங்களுடைய 114 முதன்மைப் பயிற்சியாளர்கள், சமூகக் கல்வியாளர்களாகச் செயல்பட்டு, கடலுடன் தொடர்புடைய முக்கியமான அறிவைப் பரப்புகின்றனர். மீனவர்களுக்குப் பின்வரும் அம்சங்களில் அவர்கள் பயிற்சி அளிக்கின்றனர்:

1. சுற்றுச்சூழலுக்கு தோழமையான முறைகளை ஊக்குவித்தல் மற்றும் தேவையற்ற, வளர்ச்சியடையாத மீன்கள் மற்றும் மீன் அல்லாத பிற கடல்வாழ் உயிரினங்கள் வலையில் சிக்குவதைக் குறைத்தல்.
2. மாறிவரும் கடல் மற்றும் கடலோரச் சூழல்களுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளும் திறனை மேம்படுத்துதல்.
3. கடல்சார் பல்லுயிரிகள் மற்றும் சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல்.

## கடல் காப்பாளன்: கடல் சூழல் அமைப்பை மீட்டெடுத்தல்

எங்களுடைய 145 கடல் காப்பாளன் தன்னார்வலர்கள், கடல் சூழல் அமைப்புகளை மீட்டெடுக்கும் பணியில் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறார்கள். தேவையான பயிற்சியும் கருவிகளும் கொண்ட இவர்கள், பின்வரும் பணிகளை மேற்கொள்கின்றனர்:

1. மன்னார் வளைகுடாவிலிருந்து, கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்களை (தேவையற்ற வலைகளை) மீட்டெடுக்கும் பணியில் ஈடுபடுதல்.
2. கடலில் உள்ள பல்லுயிரிகள் அழிவதைத் தடுப்பது மற்றும் தூய்மையான பெருங்கடல் பேணப்படுவதை ஊக்குவித்தல்.

## கூட்டு முயற்சிகளின் தாக்கம்

எமது தேசிய இணைய கல்வி மையம் (NVA) பயிற்சியாளர்கள், மீனவ நண்பன், தூதுவர்கள், முதன்மைப் பயிற்சியாளர்கள், மற்றும் கடல் காப்பாளர்கள் ஆகியோரின் ஒருங்கிணைந்த முயற்சிகள், சமூகத்தால் வழிநடத்தப்படும் நிபுணர்களை உருவாக்குவதில் எமது மையத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது., பின்வரும் பணிகளில் உள்ளூர் தலைவர்கள் முக்கியப் பங்காற்றுகிறார்கள்:

1. நிலைப்புத்தன்மையுள்ள மீன்படிப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் கடலோர வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல்.
2. கடல் சூழல் அமைப்புகள் மற்றும் பல்லுயிர்களைப் பாதுகாத்தல்.
3. பேரிடர் தயார்நிலை மற்றும் காலநிலை மீள்திறனை மேம்படுத்துதல்.

## சிறு விவசாயிகளுக்குப் மிதி குழாய்கள்

விவசாயத்தில் நிலைத்தன்மையுள்ள நடைமுறைகளைப் பின்பற்றும் நோக்கில், 200 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, உயர் செயல்திறன், குறைந்த செலவு, மற்றும் எரிபொருள் சேமிப்பு கொண்ட கான்கிரீட் மிதி குழாய்களை எமது மையம் தயாரித்து வழங்கியுள்ளது. மிதித்து இயக்கப்படும் இந்த பம்புகள், நீர் மேலாண்மை மற்றும் நீர்ப்பாசனத்திற்கு மலிவான செலவில் சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்று வழிமுறைகளாக செயல்படுகின்றன.

இந்த மிதி பம்புகள், குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில், மிகவும் பயனுள்ளதாக உள்ளன. இயந்திரங்களால் துளையிடப்பட்ட கிணறுகளில் அதிகரிக்கும் உப்புநீர் ஊடுருவலைத் தடுத்து, இவை விவசாயத்திற்கு உதவுகின்றன. உப்புநீரின் தாக்கத்தைக் குறைத்து, நிலையான விவசாயத்திற்கு ஆதரவு அளிப்பதுடன், மின்சாரம் கிடைக்காத பகுதிகளில் வாழும் விவசாயிகளுக்கு நீர் பாய்ச்சுவதற்கான சிறந்த தீர்வாகவும் இவை இருக்கின்றன.

மிதி பம்புகளைப் பயன்படுத்துவதால், எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான செலவைக் குறைத்து, சிறு விவசாயிகளுக்கு உதவியிருக்கிறது. இந்தப் பம்புகள் மூலம் விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு எளிதாக நீர் பாய்ச்சி, உற்பத்தியை அதிகரிப்பதுடன், செலவுகளையும் குறைக்க முடியும். இத்திட்டம், விவசாயத்தின் நீண்டகால நிலைத்தன்மைக்கு ஆதரவளித்து, கடலோரப் பகுதிகளில் வாழும் சிறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுகிறது.

## இடர்களைக் குறைத்து, வாழ்வாதாரத் திறனை உயர்த்தும் மீன்பிடி உபகரணங்கள்

இம்மையம், மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு ஆதரவளிக்கும் பல நேரடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இம்மையத்தால் வழங்கப்படும் புதுமையான மற்றும் பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட கருவிகள், மீனவ சமூகத்தினர், தங்கள் வாழ்வாதாரத்தில் ஏற்படும் அவசரச் சூழல்களைச் சமாளிக்க உதவுகின்றன.

கடல் பயணத்திற்கான திசைக்காட்டி கருவிகள்: சிறிய அளவில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு, 600 ஜிபிஎஸ் (GPS) கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மீன்பிடிப் பகுதிகளையும், தங்கள் வழிகளையும் துல்லியமாகக் கண்டறிய இவை மீனவர்களுக்கு உதவுகின்றன. மேலும், மீன்வளம் அதிகமாக உள்ள இடங்களை திறனுடன் அடையாளப்படுத்தவும், எதிர்காலத்திற்கு உதவ அத்தரவுகளை சேமித்து வைக்கவும், வழித்தடங்களை கண்டறியவும் கடலில் செலவிடும் நேரத்தைக் குறைக்கவும், மீன்பிடித் திறனை மேம்படுத்தவும் இக்கருவிகள் உதவுகின்றன.

மொபைல் கைபேசிகள் மற்றும் கையடக்கத் திரை சாதனம் (டேப்லெட்டு): கடலைப் பற்றிய தகவல்களை விரைவாகப் பெறுவதற்கும், எளிதாகத் தொடர்பு கொள்வதற்கும் உதவும் வகையில், 1000-க்கும் அதிகமான ஆண்ட்ராய்டு மொபைல் கைபேசிகளும், 250 டேப்லெட்டுகளும் மீனவர்களுக்கும் மீனவப் பெண்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

தள்ளு வண்டிகள்: கடலூர் மாவட்டம், முடசலோடை கிராமத்தில் உள்ள ஐந்து மீனவப் பெண்கள் குழுக்களின் போக்குவரத்தை எளிதாக்குவதற்காக, சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தள்ளு வண்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வண்டிகள், பெண்களின் உடல் உழைப்பைக் குறைத்து, காயங்கள் ஏற்படும் அபாயத்தைத் தவிர்க்கின்றன. மேலும், அறுவடைக்குப் பிறகு ஏற்படும் மீன் இழப்பைக் குறைத்து, உற்பத்தி மற்றும் மீன் தரத்தை மேம்படுத்துகின்றன. இதன் மூலம், அவர்களின் ஆரோக்கியத்தையும் பொருளாதாரத்தையும் உயர்த்துகின்றன.

கடல் பாதுகாப்பு உபகரணத் தொகுப்புகள்: இம்மையம், 184 மீனவர்களுக்கு, உயிர் காக்கும் மிதவைகள், சூரிய ஒளி விளக்குகள் மற்றும் கடல் பாதுகாப்புக் கருவிகளைக் கொண்ட ஒரு தொகுப்பை வழங்கியுள்ளது.

சுகாதாரமான மீன் சேமிப்பு: தமிழ்நாட்டில் உள்ள 1000 மீனவப் பெண்களுக்கு, மீன்களைச் சுகாதாரமாகப் பாதுகாக்க ஐஸ்பெட்டிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால், மீன்களின் தரம் மேம்படுவதோடு, மீன்பிடிப்பிற்கு பிறகு ஏற்படும் இழப்புகளும் குறைகின்றன.
பொது ஒலிபெருக்கி அமைப்பு: தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்க, 15க்கும் மேற்பட்ட கிராமங்களில் கம்பிவழி மற்றும் கம்பியற்ற பொது ஒலிபெருக்கி அமைப்புகளை இம்மையம் நிறுவியுள்ளது.

மீன் வளர்ப்பு பண்ணைக்கான கருவிகள்: உற்பத்தி மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, விவசாயக் கருவிகள், மீன் தீவனங்கள், வீச்சு வலைகள் மற்றும் இடுபொருட்களைக் கொண்ட 50 தொகுப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்த சிறப்பான முன்னெடுப்புகள், புதுமையான தீர்வுகளை வழங்குதல், வாழ்வாதாரத் திறனை மேம்படுத்துதல், மற்றும் கடலில் பாதுகாப்பை ஊக்குவித்தல் போன்றவற்றின் மூலம் மீனவ சமூகங்களுக்கு ஆதரவளிப்பதில் எங்களின் அர்ப்பணிப்பைக் காட்டுகின்றன.



## கூட்டாண்மையின் மூலம் அரசுத் திட்டங்களிலிருந்து சிறப்பாக பயன்பெறுதல்

ICAR - தேசிய மீன் மரபணு வள மையம் (ICAR-NBFGR), மீன்வளத் துறை, வேளாண்மைத் துறை, நெட்ஃபிஷ்-எம்பிடா (NETFISH-MPEDA), இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் டாஃப்கோஃபெட் (TAFCOFED) போன்ற முக்கிய நிறுவனங்களுடன் இணைந்து, மீனவர்கள், மீன் விவசாயிகள் மற்றும் பழங்குடியின குடும்பங்கள் அவர்களுக்குத் தேவையான முக்கிய திட்டங்களை அணுகிப் பெறுவதற்கு, இம்மையம் உறுதுணையாக இருந்து வருகிறது. இந்தக் கூட்டாண்மைகள், கடலோர மற்றும் மீனவ சமூகங்களின் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு நன்மைகளை வழங்கியுள்ளன.

### முக்கியப் பங்களிப்புகளுள் உள்ளடங்குபவை:

மேம்படுத்தப்பட்ட வளங்கள்: உற்பத்தித்திறனை அதிகரிக்க, விவசாயக் கருவிகள், மீன் தீவனங்கள் மற்றும் வீச்சு வலைகள் போன்ற அத்தியாவசிய உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மீன் வளர்ப்பில் புதுமையான உத்திகள்: நண்டு வளர்ப்பு அமைவிடங்களை நிறுவவும், மீன் வளர்ப்புப் பண்ணைகளில் உயிரியல் பாதுகாப்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகளைச் செயல்படுத்தவும் உதவி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், நிலைப்புத்தன்மையுள்ள நடைமுறைகள் உறுதி செய்யப்படுகின்றன.

நிதி உள்ளடக்கம்: பிரதம மந்திரி உணவுப் பதப்படுத்தல் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME) மற்றும் டாஃப்கோஃபெட் (TAFCOFED) போன்ற திட்டங்கள் மூலம், மீன் சார்ந்த தொழில்களை விரிவுபடுத்தவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் கடன்கள் மற்றும் நிதியுதவி கிடைக்க பயனாளிகளுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த இணைப்பு வசதிகள் 9.6 கோடி ரூபாய் மதிப்புள்ள பலன்களைப் பெறுவதற்கு உதவி புரிந்து, 534 தனிநபர்களின் வாழ்க்கையை மாற்றியுள்ளது. இதன் மூலம், சமூகத்தினருக்கும், அரசு நிதியுதவி நிறுவனங்கள் வழங்கும் ஆதரவுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதன் மூலம், மீனவர்களின் வருமானத்தை அதிகரிப்பதுடன், மீன்வளத் துறையில் நிலைப்புத்தன்மையையும், மீள்திறனையும் மேம்படுத்தியுள்ளது.



















## விருதுகளும் அங்கீகாரங்களும்

நிலைப்புத்தன்மையுள்ள மீன்வளர்ப்பு, பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் கடலோர சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில், அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் (Fish for All Centre) தனது புதுமையான மற்றும் ஆக்கப்பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தும் பணிக்காகத் தொடர்ந்து அங்கீகாரத்தையும், பாராட்டையும் பெற்று வருகிறது. எமது மையத்தின் தனித்துவமான அணுகுமுறை, சிறப்பான அர்ப்பணிப்பு மற்றும் நேர்மறையான மாற்றங்களை உருவாக்கும் உந்துதல் ஆகியவற்றின் காரணமாக, பல மதிப்புமிக்க விருதுகள் எமது மையத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

## நிறுவன விருதுகள்

**பெண்கள் இணைப்பு சவால் (WCC) மானியம் (2023):** நாங்கள், இந்தியா முழுவதும் 260 விண்ணப்பங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு சமூகத் துறை நிறுவனங்களில் ஒன்றாக, இந்த மதிப்புமிக்க அங்கீகாரம் பெற்றோம். இந்த அங்கீகாரம், பெண்களின் அதிகாரமளிப்பு மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்ப இணைப்பை ஊக்குவிப்பதற்கான எங்கள் புதுமையான முயற்சிகளுக்கான அங்கீகாரமாகும்.

**நன்மைக்கான தொழில்நுட்ப விருது (2021):** எங்கள் மீனவ நண்பன் மொபைல் செயலி, பேரிடர் மேலாண்மைக்கான தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் (ICT) என்ற பிரிவில் இந்த விருதை வென்றது. சமூக நன்மை, விரிவாக்கலுக்கான திறன் மற்றும் நிலைப்புத்தன்மை ஆகியவற்றை ஊக்குவிக்க, தொழில்நுட்பத்தின் புதுமையான பயன்பாட்டிற்கான அங்கீகாரமாக இவ்விருது வழங்கப்பட்டிருக்கிறது.

**மொபைல் ஃபார் குட் விருது (2014):** 245 பரிந்துரைகளில், எங்கள் மீனவ நண்பன் மொபைல் செயலி நான்கு இறுதிப் போட்டியாளர்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த விருது, சமூக நன்மைக்காகத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் எங்கள் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கிறது.

**உலகளாவிய சிறு புத்தாக்க சவால் விருது (2019):** எங்கள் மீனவ நண்பன் மொபைல் செயலி, விளிம்புநிலைச் சமூகங்களின் காலநிலை பாதிப்பிலிருந்து மீண்டெழும் திறனை உருவாக்கும் ஒரு புதுமையான தீர்வாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த விருது, அழுத்தமான சமூக மற்றும் சுற்றுச்சூழல் சவால்களுக்குப் புதுமையான தீர்வுகளை உருவாக்குவதில் எங்களின் அர்ப்பணிப்பிற்கு சான்றாக காட்டுகிறது.

**தெற்காசியா பில்லியன்த் விருது தெற்காசியா (2014):** மீனவர்களுக்கு அத்தியாவசியத் தகவல்களைத் தெரிவிக்க வடிவமைக்கப்பட்ட எங்கள் மொபைல் செயலிக்காக, இந்த விருதை நாங்கள் பெற்றிருக்கிறோம். இந்த அங்கீகாரம், கடலோர சமூகங்களின் வாழ்க்கையை மேம்படுத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் எங்கள் திறமையை எடுத்துக்காட்டுகிறது.

# தனி மனித விருதுகள்

மீன்வளத் துறைக்குச் சிறப்பான பங்களிப்பை வழங்கியதற்காக, எங்கள் மையத்தின் பணியாளர்களும் பல விருதுகளைப் பெற்றுள்ளனர்:



அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், மற்றும் கணிதம் (STEM) பிரிவில் பெண்களுக்கான விருது (2023):
மீன்வளத் துறை பங்கேற்பு ஆய்வில் தனது பங்கிற்காக, அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் தலைவர் டாக்டர். வேல்விழி, இந்த விருதை ஆய்வுப் பிரிவின் கீழ் பெற்றார்.

---

சிதம்பரம் நினைவு வருடாந்திர விருது (2021):
அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் மையத்தின் தலைவர் டாக்டர். வேல்விழி, கடலோரப் பகுதிகளில் உள்ள கிராமப்புற மீனவர்களின் வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் அவர் ஆற்றிய முக்கியப் பங்கிற்காக இந்த விருதைப் பெற்றார்.

---

சாதனைப் பெண் விருது (2021):
மீன்வளத் துறையில் தனது அர்ப்பணிப்பு மற்றும் சிறப்பான பங்களிப்புக்காக, டாக்டர். வேல்விழி இந்த விருதை வென்றார்.

---

ஸ்பார்க் பஞ்சரத்னா சாதனைப் பெண் விருது (2019):
மீன்வளத் துறையில் அவரது சிறப்பான பங்களிப்பிற்காக, டாக்டர். வேல்விழி இந்த விருதை மீன்வளப் பிரிவில் பெற்றார்.

இந்த விருதுகள், சிறப்பான பங்களிப்பு, புதுமையான அணுகுமுறை மற்றும் கடலோர சமூகங்களின் வாழ்க்கையில் நேர்மறையான மாற்றத்தை உருவாக்குவதில் எமது மையம் கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கு சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

# ஆதரவு வழங்கிய கூட்டாளர்கள்

- டாடா அறக்கட்டளை
- நபார்டு, சென்னை
- தமிழ்நாடு மீன்வளம் மற்றும் வனத் துறைகள்
- TNFDC, சென்னை
- புதுச்சேரி அரசு
- INCOIS, ஹைதராபாத்
- NFDB, ஹைதராபாத்
- ICAR-NBFGR, லக்னோ
- ICAR-CIBA, சென்னை
- DST, GoI, புது டெல்லி
- Qualcomm, அமெரிக்கா
- அமெரிக்கன் இந்தியன் அறக்கட்டளை
- மைக்ரோசாஃப்ட்
- ரிலையன்ஸ் அறக்கட்டளை
- UNDP- SGP, புது டெல்லி
- ஃபைவ் ஸ்டார், சென்னை
- வேர்ல்டு வைல்டுலைஃப் ஃபண்ட்
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி (EDF)
- HCL அறக்கட்டளை
- வாட்டர் ஃபார் தேர்டு வேர்ல்டு, சுவிட்சர்லாந்து
- புளு சென்சஸ், ஜெர்மனி



mssrf

எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்
3வது குறுக்குத் தெரு, தொழிலகப் பகுதி, தரமணி,
சென்னை 600 113, இந்தியா

அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் (Fish For All Research and Training Centre)
சுனாமி நகர், பூம்புகார் அஞ்சல், சீர்காழி வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம்-609105, தமிழ்நாடு,
இந்தியா

www.mssrf.org